# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 04 திங்கட்கிழமை (17.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :141



17 APR 2006
மாநகர சபை, யாழ்ப்பாணம்.


## மட்டுவிலில் கிளைமோர் தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஏப்.17

தென்மராட்சி, மட்டுவில் வடக்கில் நேற்றுக் காலை படையினரை இலக்குவைத்து கிளைமோர்த் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்குவைத்து கனகம்புளியடிச் சந்திக்கு மேற்குப் புறமாக இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று படைத்தரப்பை மேற்கோள்காட்டி பி.பி.ஸி. தமிழோசை தெரிவித்தது.

இதேவேளை - இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ள பொங்கியெழும் மக்கள் படை இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று குறிப்பிட்டது.

இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து, பிற்பகல் 3 மணி முதல் அப்பகுதியில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தினர். (ஒ-7-31-78)

## உரிமை கோரியது மக்கள் படை

யாழ்ப்பாணம்,ஏப்.17

நேற்று தென்மராட்சியில் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு யாழ். மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை உரிமை கோரியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானம் என்ற மாயையை இனியும் நாம் நம்பத்தயாரில்லை. சமாதான காலத்தில் வஞ்சகத்தனமாக ஸ்ரீலங்காப் படைகளால் நாம் கொல்லப்படுகின்றோம். எனவேதான் ஸ்ரீலங்காப் படைகள் மீது மக்கள் படையாக நாம் தாக்கத் தொடங்கிவிட்டோம்.

கடந்த வாரம் தென்மராட்சியிலும் யாழ்ப்பாணத்திலும் எமது உறவுகள் ஸ்ரீலங்காப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற் குப் பதிலடியாகவே தென்மராட்சி யில் இன்று (நேற்று) தாக்குதல் நடத்தி இரண்டு ஆக்கிரமிப்புப் படைகளைக் கொன்றுள்ளோம். குடாநாட்டில் ஒரு தமிழ் மகன் கொல்லப்பட்டால்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கான புறச் சூழல் உருவாகாமல் பேச்சுக்குப் புலிகள் செல்லமாட்டார்கள்

## சர்வதேச சமூகத்துடன் தொடர்புகொள்ள அனுசரணைத் தரப்பான நோர்வே முயற்சி

கொழும்பு,ஏப்ரல்17

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதாயின் அதற்கான புறச்சூழ்நிலை களத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகள், அத்தகைய புறச்சூழல் ஏற்படுத்தப்படும் வரை பேச்சுகளில் தாங்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் விரைவில் தெளிவாக எடுத்துரைப்பார்கள் என அறிய வருகின்றது.**

**இதேவேளை, இலங்கை அமைதி முயற்சிகள் இக்கட்டில் சிக்கித் தடைப்பட்டுப் போயிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து சர்வதேச சமூகத்தின் ஆலோசனையைப் பெறுவதற்கு இந்த அமைதி முயற்சிகளின் அனுசரணைத் தரப்பான நோர்வே எத்தனித்து வருகின்றது.**

இலங்கை அரசுத் தரப்பு பகையுணர்வையும், விரோதப் போக்கையும் வெளிப்படுத்தி வருவதோடு, ஒட்டுப்படைகள், துணைப் படைகள் போன்றவற்றின் செயற்பாடுகளை ஊக்குவித்து, கடந்த ஜெனீவாப் பேச்சுகளின் இணக்கத்தை நடைமுறைப்படுத்தாமல் உதாசீனம் செய்தும் வருகின்றது என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமது கிழக்குத் தளபதிகள் வன்னிக்கு வந்து, கிழக்கு நிலைமைகள் குறித்து அவர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே அடுத்த சுற்றுப் பேச்சில் பங்குபற்ற முடியும் என்று புலிகளின் தலைமை விடாப்பிடியாக வலியுறுத்திவந்த நிலையில் - விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளுடன் கடற்பயணம் மூலமான வருகை கடைசி நேரத்தில் இலங்கைக் கடற்படையினர் விதித்த திடீர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஊரடங்கு

மன்னார், ஏப்.17

சைக்கிள் குண்டுவெடிப்பு, அச்சம் மற்றும் பிஸ்டல் குழுவினர் ஊடுருவியிருக்கலாம் என்ற அச்சம் ஆகியவை காரணமாக மன்னார் நகரில் நேற்றுத் திடீரென் படையினரால் சல்லடைத் தேடுதல் நடத்தப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக முன்னெச்சரிக்கையாக நேற்று மாலை ஆறு மணி முதல் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. பின்னர் இரவு 8 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வவுனியாவைப் போன்று மன்னாரிலும் சில தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறலாமென உளவுத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து உஷாரடைந்த மன்னார் பொலீஸார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர் இடம்பெயர்வு

திருகோணமலை நகரப் பகுதியில் அண்மைய சில தினங்களாக இடம்பெற்று வரும் அசம்பாவிதங்களை அடுத்து நகரிலும், நகரை அண் டிய பிரதேசங்களிலும் சிங்களக் குடியிருப்புகளுக்கு நெருக்கமாக உள்ள பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

அலஸ்தோட்டம, மிகிந்தபுரம், கன்னியா, மாங்காயூற்று, வரோதயநகர், நடேசர் கோயிலடி போன்ற பகுதிகளில் இருந்தும் தமிழ் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த சுமார் 250 குடும்பங்கள் பாரதி தமிழ் மகா வித்தியாலயம், கலைமகள் வித்தியாலயம் போன்றவற்றில் தங்கியுள்ளன.

திருகோணமலையில் பதற்ற நிலைமை இன்னும் நீடித்து வருகின்றது. (க)

## விடுதலைப் புலிகள் முன் உள்ள தடைகள் அகற்றப்பட்டாலே ஜெனீவாப் பேச்சு சாத்தியம்

### நோர்வேத் தூதருக்கு தமிழ்ச்செல்வன் நேற்றுக் கடிதம்

கிளிநொச்சி,ஏப்.17

பேச்சிற்கு வருவதற்கான தடைகள் நீக்கப்பட்டுச் சுமூகமான சூழல் உண்டாகும் வரை விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழு ஜெனீவாப் பேச்சிற்கு வரமுடியாதென்பதைக் கவலையுடன் அறியத்தருகின்றோம்.

இவ்வாறு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வேத் தூதர் ஹான்ஸ்பிரட்ஸ்கருக்கு நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார் என்று புலிகளின் வட்டாரங்கள் நேற்றுத் தகவல் தெரிவித்தன.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எம்முன் போடப்பட்டிருக்கும் ஜெனீவாப் பேச்சிற்கு வருவதற்கான தடைகள் நீக்கப்பட்டு சுமூகமான சூழல் உண்டாகும்வரை எம்முடைய பேச்சுக்குழு ஜெனீவாப் பேச்சுக்கு வரமுடியாது என்பதைக் கவலையுடன் அறியத்தருகின்றோம்.

- இவ்வாறு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வேத் தூதுவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

15.04.2006 அன்று நடைபெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் பற்றியும் அதன் தொடராக

(12ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடரில்**

**இன்று : கணக்கீடு வினாத்தாள், வணிகக்கல்வி, கணக்கீடு விடைக்குறிப்புகள்.**
**நாளை : அளவையியல் வினாத்தாள், தமிழ் விடைக்குறிப்புகள் என்பன வெளிவரும்.**

## குடாநாட்டில் படையினரின் சோதனை மீண்டும் தீவிரம்!

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் நேற்று முதல் மீண்டும் அதிகரித்துள்ளன. சமாதான முயற்சிகள் மேலும் சிக்கல் அடைந்துவரும் நிலையில் படையினர் இந்த நகர்வை மேற்கொண்டுள்ளனர்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஜெனீவாப் பேச்சுகளின் இரண்டாம் கட்டம் எப்போது என்பது இன்னமும் தீர்க்கமாகத் தெரியவராத நிலையில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கிளைமோர்த் தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. படையினரை இலக்கு வைத்து நடத்தப்படும் இந்தத் தாக்குதல்களில் அண்மைய நாள்களில் படையினர் பலர் உயிரிழந்துள்ளனர்.

இத்தகைய கிளைமோர்த் தாக்குதல்கள் யாழ். குடாநாட்டிலும் அதிகரித்துள்ளன. இதனை அடுத்து வீதிச் சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினர் முடுக்கி விட்டுள்ளனர். இவர்களுடன் பொலீஸாரும் இந்தக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

வவுனியா,ஏப்.17

வவுனியா நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தனியார் பஸ் சங்கத்தின் நேரக் கண்காணிப்பாளர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் நடத்திய இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில், வவுனியா தனியார் பஸ் சங்கத்தின் நேரக் கண்காணிப்பாளரான தனசிறி என்பவரே காயமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மேற்படி நபர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து வவுனியா நகர்ப்பகுதி மற்றும் குருமண்காட்டுப் பகுதியில் இராணுவத்தினரும், பொலீஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாதுகாப்பான இடம் நோக்கி நகர்ந்து எதிரிகளை விரட்ட ஒத்துழைக்க வேண்டும்

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்.17

''குடாநாட்டுத் தமிழ்மக்கள் பாதுகாப்பான இடம்நோக்கி நகர்ந்து எதிரிகளை விரட்ட ஒத்துழையுங்கள்''

இவ்வாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் மிகப்பெரிய தமிழின அழிப்பிற்கான இராணுவத்தினருடன் இனவெறி பிடித்த காடையர்களும், குண்டர்களும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இன்று குடாநாட்டில் மூலை முடுக்கெல்லாம் இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். கொலைகளும் நடந்தேறி வருகின்றன. இது அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் இங்கு இருக்கையிலேயே தமிழ்த் தேசப்பற்றாளர்கள் படையினரால் படுகொலை செய்யப்படுகிறார்கள்.

இந்நிலையில் கண்காணிப்பாளர்கள் வெளியேறினால் நிலைமை மேலும் மோசமடையும். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழின அழிப்பிற்காகவே காடையர்களும் குண்டர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே அன்பான எம் உறவுகளே நீங்கள் பாதுகாப்பான இடம் நோக்கி நகருங்கள். வழமைபோல் என்று இருந்துவிடாதீர்கள். எதிரிகளை விரட்ட ஒத்துழையுங்கள். நம்பிக்கையோடு நகருங்கள் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறிவுறுத்தல் சுவரொட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.17

குடாநாட்டிலிருந்து வெளியேறுமாறு இராணுவ[illegible]னருக்கு அறிவுறுத்தும் சுவரொட்டியொன்று [illegible]வளியிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

''முள் வேலிக்குள்ளும் காவலரணுக்குள்ளும் எத்தனை காலம் இருப்பீர்கள். நாங்கள் ஊர் திரும்புகின்றோம். நீங்கள் புறப்படத் தயாராகுங்கள்!'' என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டி பலவர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளது. இதில் வெளியிட்டவர்கள் யார் எனக் குறிப்பிடவில்லை.

# நயினைக் கடலில் உருக்குலைந்த சடலம் மீட்பு

குடத்தனை,ஏப்.17

மிகமோசமாக உருக்குலைந்த நிலையில் நயினாதீவுக் கடலில் கரையொதுங்கிய சடலம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 3.40 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆணா, பெண்ணா என உடனடியாக அடையாளம் காணமுடியாத அளவிற்கு உருக்குலைந்துள்ள இந்தச் சடலம், பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-78)

# அச்சுவேலி தெற்கில் சுற்றிவளைப்பு

அச்சுவேலி,ஏப்.17

அச்சுவேலி தெற்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இருந்து சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நண்பகல் வரை தேடுதல் தொடர்ந்தது.

அதிகாலையில் முழுமையாகச் சுற்றிவளைத்த இராணுவத்தினரும் பொலீஸாரும் வீடுவீடாகத் தேடுதல் மேற்கொண்டனர்.

அவர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்களைப் பரிசோதித்து குடியிருப்போரின் எண்ணிக்கையையும் பதிவு செய்தனர். யாரும் கைதுசெய்யப்பட்டதாக அறியப்படவில்லை.

(ஒ-11)

# சந்தைப் பணியாளர்கள் இருவர் கல்வியங்காட்டில் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம்,ஏப்.17

கல்வியங்காடு சந்தையில் வைத்து நேற்றுக்காலை இரு இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தையில் குத்தகைப் பணம் அறவிடும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்க[illegible] இருவரே கைதுசெய்யப்பட்டனர் என்று கூ[illegible]படுகிறது.

வருடாந்தம் பிரதேச சபையிடம் குத்தகைக்கு சந்தையைப் பொறுப்பேற்கும் தனி நபர்கள் அங்குள்ள வியாபாரிகளிடம் வரிப்பணம் அறவிடுவதற்காகப் பணியாளர்களை பணிக்கமர்த்துவது வழக்கமென்றும் -

அத்தகைய பணியில் ஈடுபட்டிருந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3-180)

# கவிஞர் நாவண்ணன் காலமானார்



பல்துறைசார் கலைஞர் கவிஞர் நாவண்ணன் என்றழைக்கப்படும் ம.சூசைநாயகம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு காலமானார்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பதிவுகளை தனது எழுத்து, ஓவியம், சிற்பம் உள்ளிட்ட அம்சங்களூடாகபதிவு செய்தவர் கவிஞர் நாவண்ணன்.

இவர் தமிழன் சிந்திய இரத்தம், கரும்புலி காவியம், இனிமைத் தமிழ்மொழி, எமது ஈரமுது சிறப்பு நிகழ்ச்சிகள் உள்ளிட்டவற்றை புலிகளின் குரல் வானொலியில் எழுதித் தயாரித்திருந்தார்.

அரங்காற்றுகையிலும் தனக்கென தனியானஇடத்தினைப் பிடித்துக்கொண்டவர் கவிஞர் நாவண்ணன்.

ஓவியம், சிற்பம் ஆகிய படைப்பு களையும் வெளிப்படுத்திய அவர் இறுதிக் காலத்தில் ஒளிக் கலையிலும் தீவிரமான ஈடுபாடு காட்டினார். தலைவர் வே.பிரபாகரன் இருதடவைகள் இவருக்குத் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்தார்.

(ஒ)

# காவல்துறையின் இவ்வாண்டுக்கான முதலாம் அணியின் பயிற்சி நிறைவு

அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார் காவல்துறைப் பொறுப்பாளர்



தமிழீழக் காவல்துறையின் இந்த ஆண்டுக்கான முதலாம் அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழீழக் காவல்துறையின் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கல்லூரிக் கண்காணிப்பாளர் தமிழரசன் தலைமை தாங்கினார்.

பொதுச் சுடரினை அடம்பன் காவல்பணிமனைப் பொறுப்பாளர் அன்ரன் ஜோசப் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை காவல்துறை நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் மாதவன் ஏற்றினார். அன்னைபூபதியின் திருவுருவப் படத்திற்கு மன்னார் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் கண்ணாளன் ஏற்ற மலர்மாலையினை தமிழீழ காவல்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் இயலரசன் அணிவித்தார்.

தமிழீழக் காவல்துறைக் கொடியினை காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கானகன் ஏற்றினார். இதைத் தொடர்ந்து பயிற்சியை நிறைவு செய்த அணியினரின் அணிவகுப்பு நடைபெற்றது. அணிவகுப்பு மரியாதையை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றுக்கொண்டார்.

தமிழீழ காவல்துறையின் ஆய்வாளர்கள் கிருபாகரன், இமாக்கிறோ, விஜயகுமார் மற்றும் துணை ஆய்வாளர் கபிலன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சிறப்புரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. பயிற்சியின்போது நடத்தப்பட் போட்டிகளில் பங்குகொண்டு அதிக புள்ளிகளைப் பெற்றோருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஒ)(22)

# 'குமுதினி' படகில் மோ.சைக்கிள்களை ஏற்றிச்செல்வதில் பாரபட்சமாம்

ஏப்பரல்,ஏப்.17

நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்தில் ஈடுபடும் குமுதினிப் படகில் மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச் செல்வதில் பாரபட்சம் காட்டப்படுவதாக நெடுந்தீவு மக்கள் கூறுகின்றனர்.

அரச படகான குமுதினியில் ஒரு சேவையில் இரண்டு மோட்டார் சைக்கிள்களை ஏற்றிவர அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறை வழமையாகக் கைக்கொள்ளப்பட்டு வந்தது. ஒரு சமயம் இது [illegible]தொடர்பாக எழுந்த சிக்கலைத் தொடர்ந்து குமுதினியில் மோட்டார் சைக்கிள்கள் ஏற்றிச் செல்வது நிறுத்தப்பட்டது.

எனினும், தற்சமயம் அதி[illegible]ாரிகள், குருமார்களுக்கு மட்டும் இதில் விதி[illegible]விலக்கு அளிக்கப்பட்டு அவர்களது மோட்[illegible]ர் சைக்கிள்கள் இரண்டு மட்டும் ஏற்றிச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

பிரயாணிகள் தம்முடன் எடுத்துவரும் மோட்டார் சைக்கிள்களில் இரண்டை மட்டும் சேவை ஒன்றில் முன்னர் போல் அனுமதிக்கும்படி நெடுந்தீவு மக்கள் கோருகின்றனர்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று படகில் எடுத்துச் செல்வதற்காக முதலில் வரும் இரண்டு மோட்டார் சைக்கிளை குமுதினிப் படகில் எடுத்துச் செல்லும் படியும் -

அது பொதுமக்கள் அல்லது அதிகாரிகள், குருமார்கள் என எவருடையதாகவும் இருக்கலாம் என்றும் -

பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

இது தொடர்பாக அண்மையில் நெடுந்தீவுக்கு வருகை தந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் மக்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

(ஒ-111)

# உணவு வகைகளின் விலையை பார்வைக்கு வைக்க அறிவுறுத்து

கிளிநொச்சி,ஏப்.17

சகல உணவகங்களிலும் விற்பனை செய்யப்படும் உணவு வகைகளின் விற்பனை விலையை நுகர்வோரின் பார்வைக்குக் காட்சிப்படுத்துமாறு தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

(எ-202)

# கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கலைஞர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும், இறுவட்டு வெளியீட்டு விழாவும் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெற்றது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தலைவர் கருமதிருதி வைத்தியக் கலாநிதி வை.தியாகராசா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

மங்கள விளக்கை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஏற்றினார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கலைஞர்கள் மலர்மாலை அணிவித்து பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அடுத்து இசைதட்டு வெளிட்டு வைக்கப்பட்டது.

முதற்பிரதியை யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் வெளியிட்டுவைக்க புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்லப்பணிப்பாளர் யோ.பூராசா பெற்றுக் கொண்டார்.

நிகழ்வின் இறுதி [illegible] பெற்றன.

(ஒ-14-111)






# ஆஸியுடான இரண்டாவது டெஸ்ட்டில் பங்களாதேஷ் அணி 197 ஓட்டங்கள்

சிற்றஹொங், ஏப்ரல் 17

சிற்றஹொங்கில் நேற்று ஆரம்பமான 2ஆவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணியின் சிறப்பான பந்து வீச்சால் பங்களாதேஷ் அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 197 ஓட்டங்களிற்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 76 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஹைடன் 29 ஓட்டங்களுடன் ராபீக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். ஆடுகளத்தில் ஜக்கிஸ் 39 ஓட்டங்களுடனும் ஜிலெஸ்பி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் ஹபிபுல் பஸார் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணி ஜிலெஸ்பியின் வேகத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

பங்களாதேஷ் அணி ஒரு கட்டத்தில் 17 ஓட்டங்களிற்கு மூன்று விக்கெட்டுகளை இழந்திருந்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 41 ஆக இருந்த போது பங்களாதேஷ் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் மொகமட் அஸ்ரபுல், ஷேன் வோர்னின் பந்தில் மத்தியூ ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தோள்பட்டையில் சிறிது உபாதைக்கு உள்ளாகியிருப்பதால் டானியல் குல்லென் என்ற மேலதிக சுழற்பந்து வீச்சாளர் இந்த டெஸ்டில் அறிமுகமாயிருந்தார்.

ஆட்டமிழக்காமல் ராஜின் சாலே 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவர் தொடர்ந்து சிறப்பாக ஆடி 71 ஓட்டங்களைப் பெற்று மக்கீலின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் அதிக நேரம் தாக்குப் பிடிக்காததால் பங்களாதேஷ் அணி 197 ஓட்டங்களிற்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யர்ழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# களநிலைமை சீரடையாமல் புலிகள் பேச்சுக்கு வரார்

'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்' என ஒரு முதுமொழி உண்டு. இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி மஹிந்தரின் அரசு கூறி வருவதைப் பார்க்கும்போது இந்த முதுமொழிதான் நினைவுக்கு வருகிறது.

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னியில் தமது தலைமையை வந்து சந்தித்துப் பேசிய பின்னர்தான் அடுத்த சுற்று அமைதிப் பேச்சு சாத்தியம் என்பது தெளிவான பின்னர் -

முன்னைய அரசு இந்தப் போக்குவரத்துக்கு இதுவரை வழங்கி வந்த ஹெலிக்கொப்டர் வசதியைத் தடுத்து, கடல் வழிப் பயணத்துக்கும் அளவுக்கு மீறிய கெடுபிடிகளைப் போட்டு, நிலைமையைக் குழப்பியிருக்கின்றது மஹிந்தவின் நிர்வாகம்.

அமைதிப் பேச்சு சுமுகமாக நடப்பதற்கு வழிசெய்யும் விதத்தில் ஒரு ஹெலிக்கொப்டர் பயணத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கே வக்கோ - வசதியோ - மனமோ - உடன்பாடோ - இல்லாத இந்த அரசா தமிழர்களின் சட்டபூர்வமானதும், நியாயபூர்வமானதுமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் சமாதானத் தீர்வு ஒன்றை விட்டுக் கொடுத்து எட்டப்போகின்றது என்ற நியாயமான கேள்வி தமிழர்களின் மனதில் எழவே செய்கிறது.

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனது போலத்தான் ஒரு சிறிய ஹெலிக்கொப்டர் பயண வசதியை வழங்க முடியாத மஹிந்தவின் அரசு இனப்பிரச்சினையை நியாயமான தீர்வு ஒன்றை வழங்கி தீர்த்து வைக்கப் போகின்றது எனக் கருதுவது.

சர்வதேச சமூகம் என்னதான் அழுத்தங்களைப் போட்டு அமைதிப் பேச்சுக்கு திகதியை நிர்ணயிக்க வைத்தாலும் களநிலையில் மாற்றம் ஏற்படாமல் அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பது சாத்தியமற்றது என்பது தெளிவு.

பிணக்குக்குரிய இரு தரப்பும் பேச்சு மேசையில் எதிரெதிரே அமர்ந்து தொடர்ந்து ஆக்கபூர்வமாகப் பேசவேண்டும் என்றால் அதற்கு முன்னர் சில விடயங்கள் களத்தில் நிறைவேறியாக வேண்டும்.

இரு தரப்புகளுக்கும் இடையில் ஒரு சினேகபூர்வ களப் புறநிலை நிலவவேண்டும். அதை எட்டுவதற்கு பரஸ்பரம் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அமைதிப் பேச்சு, ஜனநாயகத்தை நிலைநிறுத்தல், பிரதேச அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல் என்றெல்லாம் பீற்றுவதில் அர்த்தமேயில்லை.

முதலில் மக்களின் பாதுகாப்பு நிலைமை சீரடைய வேண்டும். பாதுகாப்பாக வாழமுடியும், வாழ்கிறோம் என்று தமிழ்மக்கள் நம்பும் - கருதும் - ஒரு சூழ்நிலை நிலவும்போதுதான் அந்த மக்களின் பிரதி நிதிகளான விடுதலைப் புலிகள் அரசுத் தரப்புடன் அமைதிப் பேச்சுக்குச் செல்லமுடியும்.

இங்கு - களத்தில் - மக்களின் வாழ்வு பேராபத்தில் சிக்கி, மக்கள் வாழ்வா, சாவா என்று துடித்துக் கொண்டிருக்கும்போது அதற்குக் காரணமான தரப்போடு மக்களின் பிரதிநிதிகளான புலிகள் சமரசப் பேச்சுக்குப் போவது அபத்தமின்றி வேறில்லை.

மறுபுறத்தில் ஒட்டுப் படைகளின் அட்டகாசங்கள் அத்துமீறி வன்முறைகளாக வெடித்து, தமிழர் தாயகத்தின் பாதுகாப்பையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கியிருக்கும்போது, அந்த ஒட்டுப்படைகளின் வன்முறை நடவடிக்கைகளைத் கட்டுப்படுத்தி அவற்றின் ஆயுதங்களையும் களைவோம் என முன்னைய பேச்சுகளின்போது அரசு வழங்கிய வாக்குறுதியை, அரசுத் தரப்பு நிறைவேற்றாமல் -

இந்தத் தந்திரோபாயச் சதி நடவடிக்கைகளைத் தொடரும்போது, அமைதிப் பேச்சுக்கு தமிழரின் பிரதிநிதிகள் போவது தமிழர் தரப்பையே அது கேவலப்படுத்தும் வேலையன்றி வேறில்லை.

எனவே, தமிழர் தரப்பின் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவு செய்வதன்மூலம் அமைதித் தீர்வு ஒன்றைக் காணும் நல்லெண்ணம் இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு இருக்குமானால் -

பாதுகாப்பு நிலைமையை மேம்பாடடையச் செய்து, புலிகளுடனான முறுகல் நிலையைக் களைந்து, பேச்சுகளைத் தொடர்வதற்கான நட்புறவுப் புறச்சூழலை ஏற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான முன் நடவடிக்கைகளை அந்த அரசு எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்மைச் சுற்றி ஆலோசகர்கள், உதவியாளர்கள், அதிகார வர்க்கத்தினர் எனத் தாம் அரவணைத்து வைத்திருக்கும் யுத்தவாதிகளையும், பேரினவாதிகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு தமிழர் தரப்பை அரவணைத்துச் செல்ல இணங்க வேண்டும்.

அப்படிச் செய்வதைத் தவிர்த்து தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான புலிகள் அமைப்புடன் முரண்டு பிடிப்பதோ, பகைமை பாராட்டி மோதலுக்குச் செல்வதோ, ஒட்டுப் படைகளின் கொட்டத்தை முடுக்கி விட்டு மோதவிடுவதோ, கெடுபிடிகளை கட்டவிழ்த்துவிட்டு குழப்பங்களை ஏற்படுத்துவதோ புலிகளை அமைதிப் பேச்சு மேசைக்கு அழைத்து வரப்போவதில்லை.

நிலைமை சீரடையாமல் அமைதிப் பேச்சுக்குப் புலிகள் வருவர் என இலங்கை அரசு எதிர்பார்க்குமானால் அது அரசின் முட்டாள்தனமன்றி வேறில்லை.



அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட உலக ஆன்மீக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரையும் சந்தித்து உரையாடினார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (ஐ)

# அமைதியைக் குலைக்கும் நபர்கள் பற்றி தகவல் தரக் கோருகிறது இராணுவம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

குடாநாட்டில் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படுகின்ற நபர்கள் தொடர்பாகவும் அவர்கள் ஆயுதங்களை மறைத்து வைத்துள்ள இடங்கள் பற்றியும் தகவல்களைத் தருமாறு யாழ். மாவட்டப் படைகளின் தளபதி பொதுமக்களைக் கேட்டிருக்கின்றார்.

பலாலியில் உள்ள பாதுகாப்புப் படைத் தலைமையகம் இதுதொடர்பாக செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது குடாநாட்டில் நிலவும் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் ஒருசில நபர்கள் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்துவதில் ஈடுபட்டுள்ளார்கள். தற்போது நிலவும் அமைதியைச் சீர்குலைத்துப்பொதுமக்களைத் துன்பப்படுத்தும் வகையில் உங்களது வீடுகளைச் சோதனையிடச் செய்வதே இந்த நபர்களின் பிரதான நோக்கமாகும். இவ்வாறான நபர்களின் தந்திரங்களுக்கு ஏமாற்றமடைய வேண்டாமென பொதுமக்களாகிய உங்களை நாம் கேட்டுக் கொள்வதோடு, இந்த தீய நபர்களின் செயற்பாடுகள் மற்றும் அவர்கள் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்கள் பற்றித் தகவல் வழங்கி இந்த நபர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த எமக்கு தகவல் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வலிகாமம் பகுதியில் வசிக்கும் மக்கள் 021 222 2267 அல்லது 021 226 3398 என்ற இலக்கத்திற்கும் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்கள் 021 226 3145 அல்லது 226 3370 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்கமுடியும்.

• உங்களுக்கு நிரந்தர சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கவும், நீங்கள் வழங்கும் தகவலை பேணிப் பாதுகாக்கவும் பாதுகாப்புப் படையினராகிய நாம் கடமையுடன் செயற்படுவோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொலீஸ் கமிஷன் நியமனத்தில் அரசியல் சட்டம் மீறப்பட்டதா?

கொழும்பு,ஏப்.17

தேசிய பொலீஸ் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமித்ததன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் சட்டத்தை மீறி செயற்பட்டிருக்கிறாரா என்ற வகையில் சிவில் உரிமை ஆர்வலர்களும் சட்டத்துறை நிபுணர்களும் கேள்வி எழுப்புகிறார்கள் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

பொலீஸ் ஆணைக்குழுவில் ஏழு உறுப்பினர்கள் மட்டுமே பணியாற்ற வேண்டும் என்று 17ஆவது அரசமைப்பு திருத்தத்தின் பிரகாரம் 155 ஏ (4) ஷரத்து வலியுறுத்துவதாகவும், ஆனால் ஏற்கனவே நியமனம்பெற்ற இரு உறுப்பினர்கள் பணியில் இருக்கக் கூடியதாக ஜனாதிபதி புதிதாக ஏழு உறுப்பினர்களை நியமித்துள்ளார். இதனால், குழுவில் ஒன்பதுபேர் இருக்கிறார்கள் என்றாகின்றது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2003ஆம் ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி குறித்த இரு உறுப்பினர்களும் மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் என்றும் அதனால் அவர்கள் தற்பொழுதும் பணியில் இருக்கிறார்கள் என்றும் கருதப்படவேண்டும்.

அரசியல் அமைப்பின் 155 ஏ(1) ஷரத்து ஆணைக்குழுவில் ஏழு உறுப்பினர்கள் மட்டுமே பணியாற்ற அனுமதிக்கின்றது. எனவே, மேலதிகமாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருப்பது தெளிவான அரசியல் சட்ட மீறலாகும் என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ப)

## நாளை

சித்திரை 05
செவ்வாய்க்கிழமை
18.04.2006
திதி: பஞ்சமி
முன்னிரவு : 10.30 வரை
நட்சத்திரம் : கேட்டை
பிற்பகல் : 2.15 வரை
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

## உதயவாக்கு

*புகழ் அழகான புள்ளிமானைப் போல; அதை வளைத்துப்பிடிக்க முயன்றால், துள்ளிக்கொண்டு தூர ஓடிவிடும். அதைப்பற்றியே கவலையின்றி காரியமாற்று; தன்பாட்டில் வந்து காலை சுற்றிநிற்கும். -ஞானி.*


## சனசமூக நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.17

கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் 43ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் நிலைய முன்றிலில் நிலையத் தலைவர் மு.உதயசிறி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானமும் சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-14)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் யாழ்ப்பாணம்
விஜயம் செய்த
ஸ்ரீஸ்ரீ
ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப்பயிற்சி
இலவச அறிமுக உரை

நாள்: இன்று[ 17.04.2006 ] திங்கட்கிழமை மாலை 6 மணி
இடம்: கம்பன் கோட்டம், நல்லூர் பின்வீதி, நல்லூர்.

பயிற்சி நாள்கள்: 18.04.2006 முதல் 23.04.2006 வரை
பயிற்சிநேரம் : காலை 6 மணி முதல் 8.30 மணி வரை
அல்லது
மாலை 5மணி முதல் 7.30 மணி வரை

*அன்பில் உணருங்கள்! உங்களை உணருங்கள்!*

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544,0777157281.

(49511) (18-32-16-17)


# இசை வகுப்புகள்

சங்கானை,ஏப்.1/7

கடந்த வருடம் நடத்தப்பட்டது போன்று இவ்வருடமும் வலி. மேற்கு பிரதேச செயலகத்தினால் இசைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப் பயிற்சிநெறிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

காலை 9 மணி முதல் 12.30 மணி வரை கிற்றார், ஓகன் பயிற்சி வகுப்பும், பி.ப. 2.30 முதல் 4.30மணி வரை மிருதங்கம், புல்லாங்குழல், வயலின் வகுப்புகளும் நடைபெற்று வருவதாக வலி.மேற்கு கலாசார அலுவலர் செல்வி க.ரஜனி தெரிவிக்கின்றார். (3-29) (39)

# கல்விமாணி பரீட்சை அடுத்த மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்படிப்புகள் பிரிவினால் நடத்தப்படும் கல்விமாணிப் பட்டப்படிப்பின் இரண்டாம் வகுப்புகள் அடுத்தமாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிராந்திய கற்கை நிலையங்களில் இக் கற்கைநெறி ஆரம்பமாகுமென்று தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எஸ்.எ.விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தப் பயிற்சிநெறியின் முதலாம் வருடத்திற்கு மாணவரை அனுமதிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (3-14) (39)

# பிறந்த நாள்வாழ்த்து

17.04.2006



செல்வி துலக்சினி

வரியப்புலம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் 43/22, உவர்மலை, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

செல்வி
துலக்சினி

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (17.04.2006) திங்கட்கிழமை குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா கோகிலன், அம்மா சிவதர்சினி, மாமா நந்தகுமார், அப்பம்மா, தாத்தா, அம்மம்மா மற்றும் உறவினர்களும் நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

43/22, உவர் மலை,
திருகோணமலை.

(47837) (89-17-14)

# மூன்றாம் வருட நினைவலைகள்



| அன்னையின் மடியில் | அநியாயப் பிடியில் |
|---|---|
| 04- 11 - 1997 | 17 - 04 - 2003 |

## நடனபாதம் திலக்ஷன்

*(யா/ அத்தியார் இந்துக் கல்லூரி மாணவன்)*

ஆண்டு மூன்று ஆகிவிட்டால் ஆறிடுமா எம் துயரம்
மொட்டாக இருந்த எம் திலக்ஷா நீ பூவாக மலர்ந்து
நாம் ஆசையதை பார்த்திட முன் சருகாகி மண்ணில்
மாண்டது ஏன் பாசக்கரம் பரிதவிக்க
நேசக்கரம் துடிதுடிக்க திலக்ஷா நீ பறந்த
மாயமென்ன நாம் சிறகிழந்த பறவையானோம்
ஆயிரம் ஆயிரம் உறவு இருப்பினும் திலக்ஷா
உன் பாசத்திற்கு ஈடாகிடுமா? எம் நெஞ்சம்
இருக்கும் வரை உன் நினைவு துடிதுடிக்கும்.

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
அப்பா, அம்மா, பவிதா, யசோதா *(அக்காமார்)*.

நீர்வேலி மத்தி.

(49894) (18-99-17-14)

# இறுதிக் கொடுப்பனவு

உலக வங்கி வீடமைப்புத் திட்டத்தின் மூலம் 2005 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட கொடிகாமம், வரணிப் பிரதேச பயனாளிகளுக்கு இறுதிக் கொடுப்பனவு 30 ஆயிரம் ரூபா கொடிகாமம் கூட்டுறவு வங்கி மூலம் தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பிரதேசத்தில் தமது வீட்டு வேலைகளை முறையாகப் பூர்த்தி செய்த சுமார் 270 பயனாளிகள் இக் கொடுப்பனவைப் பெற்று வருகின்றனர் என மேற்படி கூட்டுறவு வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

வரணி வடக்கு, தவசிக்குளம், மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, கோயிலாமனை ஆகிய பிரதேச பயனாளிகளே இக் கொடுப்பனவைப் பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-122) (39)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 - 07 - 1937 | 11 - 04 - 2002 |



## திருமதி இராசம்மா கனகரத்தினம்

*திதி: 17.04.2006*

அம்மா என்ற சொல்லுக்கு இலக்கணம் அமைத்த
எம் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சம்
இருக்கும் வரை நிலைத்திருக்கும்.

கைதடி- நுணாவில்,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(49525) (89-14-17)


## புதிய பிரிவு ஆரம்பம் 23.04.2006

## Master of Business Administration (MBA)



Available - Accessible - Affordable
personalized education

Sikkim Manipal University

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of the Sikkim State Legislature in 1995. The University as the approval of University of Grants Commission, All India Council for Technical Education, Medical Council of India, Distance Education Council and Nursing Council of India.

Manipal is the nucleus of 53 educational institutions which have an enrollment of 30,000 students. There are 2 Universities, 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

**M B A**

**Now for the first time you have the opportunity of obtain a prestigious MBA at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in Sri Lanka. The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.**

**Eligibility**
Degree or equivalent profe-ssional qualifica-tion. Work experience will be an added advantages

**Duration**
2 years (Part time)

| FIRST SEMESTER | SECOND SEMESTER |
|---|---|
| Management process and organization behavior<br>Internet Application<br>Marketing Management<br>Human Resource Management<br>Operation Management<br>Financial Management<br>Management Information System | Strategic Technology Management<br>Management of Technology transfer, -absorption & IPR<br>Business Process, Re-Engineering<br>Enterprise Resource Planning<br>E-customer Relationship Management & -Supply Chain Management<br>Conflict Management & Negotiation Skills<br>History of Management, Case studies |

| THIRD SEMESTER | FOURTH SEMESTER |
|---|---|
| Infrastructure Management<br>Fundamentals of Infrastructure Project Finance<br>Infrastructure Development & Policy Planning<br>Project Management<br>Decision Support System | Electives *<br>Project<br><br>* HRD + MKT / Finance + MKT / System + MKT |

**IIS CITY CAMPUS**
# 181, Navalar Road, [illegible]
T.P. No. : 021 222 8060 / 021 222 2201


# பழுதடைந்த திரிபோஷா விநியோகம்

தென்மராட்சி,ஏப்.17

வரணிப் பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவினரால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் பழுதடைந்த திரிபோஷா மா வழங்கப்பட்டதாக புகார் கூறப்பட்டது.

இம் மா பழுதடைந்ததுடன் காலம் கடந்த நிலையில் இவை வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட தாய்மார் இது பற்றி சுட்டிக்காட்டிய போது வழங்குனர்களினால் சாட்டுப் போக்குக் கூறப்பட்டுள்ளது.

இது பற்றி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு முறையீடு செய்ய உள்ளதாகவும் பிரதேச [illegible] குறிப்பிட்டார். (3-122)

# மரண அறிவித்தல்

## திருமதி முத்துக்குமாரு சிவஞானம்மா



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரு சிவஞானம்மா அவர்கள் 13.04.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பையா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கத்தின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சபாலிங்கம் மற்றும் தேவமனோகரி (கனடா), விக்னேஸ்வரலிங்கம்(கனடா), சிவலிங்கம் (ஜேர்மனி), விமலராணி(கோண்டாவில்), சோதிலிங்கம் (கனடா), பரமலிங்கம் (லண்டன்),குகன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (பாலா), புஷ்பராணி(கனடா), அமிர்தகலா(ஜேர்மனி), சண்முகநாதன்(கோண்டாவில்), ராகினி (கனடா), சிவபாக்கியம் (லண்டன்), கோகுலவர்த்தனி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் ராகவன், சந்திரா (கனடா), மதுசுகன், ஆனந்தி (கனடா), மாதவன், கிறிஸ்ரின் (கனடா), கேசவன், சர்மிளா (ஜேர்மனி), ரமேஷ், நிசாந்தா(கனடா), சிந்துஜா, சுகன்ஜா, சரண்யா (கனடா), அகிலன், அபிலன், அனோஜா (ஜேர்மனி), பிரதீபன் (கனடா), தேனுகா, டனுஷன், லக்ஷனா, பிரியா, பிரதீபன், சோபிகா (கனடா), வித்தியா, அபியா, காவ்யா(லண்டன்), அஜந், ஆரபி (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் மோனிஷா, ஜெனன்(கனடா), சந்தோஷ், மகிமா(கனடா), சேனாதி(கனடா), வரன், கோபிகா (கனடா) ஆகியோரின் பூட்டியும் அம்மாக்குட்டி, அன்னம், பொன்னையா, காலஞ்சென்ற தம்பித்துரை, நடேசர் ஆகியோரின் மைத்துனியும் நடராஜா, ஆனந்தம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (17.04.2006) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில்.*

தகவல்:
முத்துக்குமாரு *(கணவர்)*
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(49502) (18-39-14-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தின் பல்வேறு பரிமாணங்களை செயல் முறையுடன் விளக்கும் கண்காட்சி

**விவசாயத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் விவசாயக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது. மேற்படி விவசாயக் கண்காட்சியின் பல்வேறு பரிமாணங்களையும் விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

வாழ்க்கையில் இயற்கையோடு இணைந்து மனிதனை உயிர் வாழவைத்த விவசாயம் இன்று நவீனம் என்ற போர்வையில் மனிதனையும், இயற்கைச் சூழலையும், அழித்து ஒழிப்பது கண்டுணரப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டில் யாழ்.மாவட்டம் மேல் நிலை அடைந்து வருகின்றது. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்த சூழல், மன அழுத்தங்கள் மற்றும் காரணிகளோடு விவசாயத் துறையில் கையாளப்பட்டுவரும் முறைகேடுகள் மக்களை மேலும் பாதிப்படையச் செய்திருப்பதோடு, இயற்கைச் சூழலையும் சிதைவடையச் செய்து குடாநாட்டின் நிலக் கீழ் நீர் வளம் உவர் அடையச் செய்யப்படுவதோடு, இரசாயனக் கலப்புகளால் நஞ்சூட்டப்படும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

யாழ்.மாவட்டத்தின் விவசாயத் துறையில் கையாளப்படும் கிருமிநாசினி விசிறல், உரப் பசளைகளின் அளவுக்கு மீறிய பாவனை, கட்டுப்பாடு இன்றி நிலக்கீழ் நீரை நீர்ப்பாசனம் என்ற போர்வையில் சூறையாடல் என்பன பக்கவிளைவுகளைப் பற்றிய சிந்தனை இன்றி மேற்கொள்ளப்படுகின்றன.

விவசாயத் துறையில் கையாளப்பட்டு வரும் முறைகேடுகள் மனிதனையும் மற்றும் உயிர் இனங்களையும் பாதிப்படையச் செய்து மரணம் வரையும் கொண்டு செல்வதோடு, உயிர்க்கொல்லி நோய்களுக்கும் உள்ளாக்கி விடுகின்றன.

மண், நீர், காற்று உள்ளிட்ட இயற்கைச் சூழல் மாசடைந்து சமகாலச் சந்ததி பாதிப்படைவதோடு, எதிர்காலச் சந்ததி எதிர்பாராத இன்னலைச் சந்திக்கப் போகின்றது என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் மாபெரும் கண்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

''எதிர்காலச் சந்ததிக்கான இனிதான வாழ்விடம்'' என்ற கருப்பொருளை மையமாக வைத்து,

''யாழ்.மக்களே! விழித்தெழுங்கள்'' என்ற உணர்வு பூர்வமான தூண்டுதலோடு

''உங்கள் நீரும் நிலமும் உவராகிக் கொண்டு வருகின்றது!''

''உங்கள் குடிதண்ணீர் அருகிக் கொண்டு வருகின்றது!''

''நீங்கள் உண்பது நஞ்சேறிய மரக்கறிகளே!''

''நீங்கள் வாழும் சூழல் பாதுகாப்பானதா?''

''நீங்கள் எதிர்காலச் சந்ததிக்கு விட்டு வைப்பது என்ன?''- என்பதை பொதுமக்களுக்கு உணர்த்தும் காட்சியகங்களும்-

''யாழ். மாவட்ட விவசாயப் பெருமக்களே! பயிர் உற்பத்திகளை உயர்த்துகின்றீர்கள். ஆனால், நிலம் உவர் நிலமாக மாறிவருவதை மறந்து விடுகிறீர்கள்!''

''மரக்கறிகளை உற்பத்தி செய்கின்றீர்கள் ஆனால், அவை நஞ்சூட்டியவை என்பதை மறந்துவிடுகின்றீர்கள்!''

''பயிருக்கு நீரை இறைக்கின்றீர்கள் ஆனால், நீர் உவர் நீராக மாறிவருவதை மறந்து விடுகின்றீர்கள்!''

''வருமானத்திற்காக உழைக்கின்றீர்கள். ஆனால், நீங்களும் நோயாளியாகி உங்கள் சந்ததியும் நோயாளியாவதை மறந்து விடுகின்றீர்கள்!''

''நோயாளியான உங்களின் உயிரைப் பணம் மீட்குமா?'' என்ற வினாக்களுக்கு விடைகாணும் விதத்தில் காட்சியகங்கள் அமைக்கப்படுகின்றன.

### கண்காட்சியின் பிரதான அம்சங்கள்

**கொள்கலன் நாற்று உற்பத்தி:**

கொள்கலன் பயிர்ச்செய்கை, மண் இல்லாத விவசாயம், மண் பரிசோதனைக்கூடம், செயல்முறை விளக்கம், மண் பரிசோதனையை விவசாயிகள் செய்வித்து தமது நிலங்களில் செய்கைபண்ணக்கூடிய பயிர் இனங்களைத் தெரிவு செய்தல்.

பயிர்கள் வாரியான விதைமாதிரிகள், நோய்ப் பீடைகளின் மாதிரிகள், அவற்றை போக்குவதற்கான வழிமுறைகள், ஆலோசனைகள், வெங்காய இலைமுறுகலுக்கான பரிகாரம், பழப்பயிர் மாதிரிகள், கிழங்குப் பயிர் மாதிரிகள், உயிரியல் பீடை நாசினிகள், அவற்றின் பயன்பாடுகள், மா, வாழை பயிர்களின் அறுவடைக்கு முந்திய, பிந்திய தொழில்நுட்பங்கள்.

நவீன காளான் பயிர்ச்செய்கை- அவற்றுடன் தொடர்பான செயல்முறை விளக்கங்கள்.

மண் புழுவளர்ப்பும் - புதிய மண்புழு இனங்களின் அறிமுகம், சேதனப் பசளை உற்பத்தி, தேனீ வளர்ப்புப் முறைகள் - அது தொடர்பான செயல்முறை விளக்கம்.

பீடை நாசினிகளைப் பாதுகாப்பாகக் கையாளும் செயல்முறை விளக்கம், விவசாயக் கைத்தொழில் முயற்சிகள் பற்றிய விளக்கங்கள் விவசாய தொழில்நுட்ப பிரசுரங்களின் விற்பனை, பழமரங்களைக் கத்தரித்தல், பராமரித்தல்.

| ஞானஆதவன் |
| --- |
| *அச்சுவேலிச் செய்தியாளர்.* |

பண்ணைகளின் விரிவாக்கல் செயற்பாடுகள் உற்பத்திப் பெறுமான அதிகரிப்புகள் -

**நுண்நீர்ப்பாசன முறைகள்:**

தூறல் நீர்ப்பாசனக் கருவிகளை மானிய விலையில் கொள்வனவுசெய்து விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நிலங்களில் இணைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் என்பவற்றுடன் விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாடுகள், அதுதொடர்பான விளக்கவுரைகள்.

மாவிலைத்தத்திகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விளக்கம்.

**விவசாய ஆலோசனைச் சேவை**

கால் நடைகளுக்கான நோய்களும் அது தொடர்பான மருத்துவ வசதியும்: செயற்கை முறைச் சினைப்படுத்தல், கால்நடை மற்றும் கோழிகளுக்கான தடைமருந்து வகைகள் விநியோகம்.

கால்நடை வளர்ப்புக்குரிய நவீன புல் இனங்களின் அறிமுகம், இலவசமாக புல் இனங்கள், புல் துண்டங்கள் விநியோகம் என்பன உட்படப் பல்வேறு காட்சி அமைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**நடமாடும் சேவை**

விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு நடமாடும் சேவை மூலம் அந்த இடத்திலேயே தீர்வு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர் அலுவலகம், விவசாய, காணி, கால்நடை, நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சின் செயலகங்கள், மாகாண காணி ஆணையாளரின் செயலகம், விவசாயத் திணைக்களம், விவசாய ஆராய்ச்சிப்பகுதி, கமநல சேவைத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலகமும் காணிக் கிளையும் கூட்டுறவுத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம், தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை, நீர்வள அபிவிருத்தி சபை, கமத்தொழில் காப்புறுதித் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, மீன்பிடி அமைச்சின் செயலகம் என்பனவும் இங்கு நடமாடும் சேவையினை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

**மலிவு விற்பனை**

பழமரக்கன்றுகள், விவசாயப் பயிர்நாற்று வகைகள், மரக்கறி பயிர் விதைகள், ஜசுபி தயாரிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு உற்பத்தி பொருள்கள் பொது மக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யப்பட வுள்ளன.

**மாணவர் மதிய உணவுக்கான போஷனைத் தோட்டம்**

ஒரு குடும்பத்திற்கோ அல்லது பாடசாலை மாணவர்களுக்கோ கிடைக்கக் கூடிய போஷாக்கு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய மாதிரித் தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதே மாதிரியைப் பின்பற்றி பாடசாலைகளிலும் வீடுகளிலும் போஷக்கு உணவுப் பயிர்களைச் செய்கை பண்ணுவதற்கு ஆலோசனை உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பொருள்காட்சி நடமாடும் சேவை தொடர்பான செயற்பாடுகள் கடந்த காலங்களில் நகரங்களை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்தமுறை விவசாயக் கிராமம் ஒன்றில் கண்காட்சி நடத்தப்படுவது காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்ட ஏற்பாடாகக் கொள்ளப்படுகின்றது. காலத்தின் தேவையை மற்றும் உண்மைகளை சகல தரப்பினரும் கண்டுணர வேண்டும்.(39-27)













**கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.**

**சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய அணி வகுப்பு மரியாதையுடன் பிரதம விருந்தினர்கள் மற்றும் பிரமுகர்கள் அழைத்துவரப்படுவதையும் - மூன்று மாடிக்கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படுவதையும் - மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.**

**(படங்கள்: ஒளி அதிரன்)**

# சிறுவர் மன விருத்திப் பாடசாலையின் மூன்றுமாடிக் கட்டடம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்தி பாடசாலையின் புதிய மூன்றுமாடிக் கட்டடம் நேற்றுமுன்தினம் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

முன்னதாக, சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்பு மரியாதையுடன் விருந்தினர்கள் மற்றும் பிரமுகர்கள் கட்டடப் பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர்.

மங்கள விளக்கினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை உட்படப் பல, ரும் ஏற்றிவைத்தனர்.

மருதனார்மடத்தைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்துவருபவருமான இசை வித்தகி திருமதி சிவசக்தி சிவநேசனின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அடித்தள மண்டபத்தினை சிவசக்தியின் பெற்றோர்களான இளைப்பாறிய ஆசிரியர்களான சிவப்பிரகாசம்பிள்ளை அங்கயற்கண்ணி தம்பதியினர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தனர்.

முதலாவது மாடியினை தமது நிதியுதவியில் அமைத்துக் கொடுத்த கொட்டடியைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான கா.விஜானந்தனின் சகோதரனும் -

கந்தரோடையைச் சேர்ந்தவரும் அமெரிக்கா புளோறிடாவில் வசிப்பவருமான வைத்திய கலாநிதி க.தேவக[illegible] நிதியுதவியுடன் [illegible]மைத்துக் கொடுக்கப்பட்ட இரண்டாவது மா[illegible]க் கட்டடத்தினை லண்டனில் வசிப்பவரான வே.சிவசுந்தரமும் நாடாவை வெட்டித் திறந்துவைத்தனர்.

நிகழ்வுகள் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றன. வரவேற்புரையினை சிவபூமி பாடசாலையின் உப தலைவர் க.சிவாஜியும் ஆசிரியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் நிகழ்த்தினர்.

வாழ்த்துரையினை ஒப்புரவாளர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை உட்பட பலரும் நிகழ்த்தினர். வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் புதிவாளர் நாயகமும் சிவபூமி பாடசாலையின் செயலாளருமான ந.சதாசிவஐயர் [illegible]

இந்த நிகழ்வில் கல்வியாளர்கள், பெற்றோர்கள் [illegible] பலரும் கலந்துகொண்டனர்.

(எ-7-86-49-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 - 06 - 1937



மறைவு 16 - 03 - 2006

### திருமதி சூசைப்பிள்ளை பூபதி

பாசத்துடன் எம்மை வளர்த்த அம்மாவே!
நேசக்கரம் நீட்டி எம்மை நெஞ்சத்தில் வைத்தவளே!
நாசமாய்ப் போன காலன் வஞ்சம் தீர்த்ததாலே எம்மை
மோசம் செய்துவிட்டு பிரிந்தாயோ அம்மாவே!
எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் அம்மாவின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (17.04.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து பிரார்த்திப்பதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: ஆ.தவராசா (மகன்).
வீரபத்திரர் கோயிலடி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (49521)(32-17-14)

பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி
## கேள்வி அறிவித்தல் - 2006

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் (SIRUP II) - 2006 நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

1.அ.ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும், இலங்கை தேசியக்கட்டட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும், பதிவுப் புத்தகம் 2006ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

ஆ.பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்துமுடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப் பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ',இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும் மீளளிக்கக் கூடிய, மீளளிக்கமுடியாத வைப்புப் பணமும் விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. ஆ.கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT)15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல்வேண்டும்.

3. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 17.04.2006ஆம் திகதியிலிருந்து 02.05.2006 ஆம் திகதி நண்பகல் 12மணி வரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப்பணம் | மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 01. யா/மிருசுவில் அ.த.க.பா, மீள் புனர்நிர்மாண வேலை-80'/16' வகுப்பறைக் கட்டடம். | ரூ. 250.00 | ரூ. 2000.00 | எம் 9 |
| 02. யா/குடமியன் அ.த.க.பா., புனர்நிர்மாணித்தல், அலுவலகமும் வகுப்பறைக் கட்டடமும் அமைத்தல் 60'/20' | ரூ. 500.00 | ரூ. 4960.00 | எம் 8 |
| 03. யா/மிருசுவில் றோ.க.த.க. பா., மிகுதிவேலை இருமாடிக்கட்டடம் (18.29 / 7. 6) | ரூ.250.00 | ரூ. 2025.00 | எம் 9 |
| 04. யா/ அல்லாரை அ.த.க.பா., பாடசாலை கட்டடத் திருத்தம் 50'/20' | ரூ. 100.00 | ரூ. 480.00 | எம் 9 |

4. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப் பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல்வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2006ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப.11.30 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி. (சி/ 48948) (27-32-14-17)

திருமதி அ.வேதநாயகம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

## கலைஞர்கள் தேவை

பிரம்படி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள சிறீகுமரன் இசை மன்றத்திற்குப் பாடகர், பாடகிகள், பெண் அறிவிப்பாளர் தேவை. மற்றும் கிற்றார் (பேஸ் கிற்றார், லீட் கிற்றார்), டிறம்ஸ், ஒக்தபாற், தபேலா ஆகிய வாத்தியக் கலைஞர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பமுடிவு திகதி: 25-04-2006

தகைமைகளுடன் கீழ்க்காணும் முகவரிக்குத் தினமும் பி.ப. 3.30 - 6.30 மணிவரை நேரில் தொடர்புகொள்ளவும்.

பிரம்படி வீதி,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.
P.No.: 077 6531167
(49534) (32-14-17)

## சங்கானை ஆஸ்பத்திரிக்கு தனியார் பாதுகாப்புச் சேவை

வலி.தென்மேற்கு,ஏப்.17

சங்கானை சுற்றயல்கூறு அரசினர் வைத்தியசாலையில் தனியார் பாதுகாப்புச் சேவை ஒன்று கடந்த வாரம் முதல் நடமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக மேற்படி வைத்திய சாலையில் வெளிநபர்கள் சிலர் அடுத்தடுத்து மேற்கொண்ட அசம்பாவித சம்பவங்களை அடுத்து இந்த தனியார் பாதுகாப்புச் சேவை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொன். சாம்பசிவம் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

## மனைமுகாமைத்துவ பயிற்சி வகுப்பு

வலி.தென்மேற்கு,ஏப்.17

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் மனை முகாமைத்துவ பயிற்சிநெறி ஒன்று கடந்த 6ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எட்டு மாத காலம் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிநெறியில் உடை அலங்காரம், தலை அலங்காரம், கேக் ஐசிங் மற்றும் சமையல் கலை ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## வீடு கையளிப்பு நிகழ்வு ஒத்திவைப்பு

தென்மராட்சி, ஏப்.17

பருத்தித்துறை கற்கோவளம், புனிதநகர்ப் பகுதியில் கே.பி.எம்.ஜி.நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தில் பூர்த்தியடைந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளன.

வேலைகள் பூர்த்தியடைந்த 15 வீடுகள் எதிர்வரும் 24 ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாகவும் -

தவிர்க்கமுடியாத காரணத்தினால் வீடுகள் கையளிப்பு நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

வீடுகள் கையளிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (எ-117) (39)

## சிறுதானியப் பயிர் கருகும் நிலையில்

தென்மராட்சிகிழக்கு, ஏப்.17

வரணிப் பிரதேசத்தில் எருவன் வயல் மற்றும் இயற்றாலை குமரணி வயல் பிரதேசங்களில் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் போதிய மழையின்மையால் இம்முறை உரிய அறுவடை கிடைக்காமல் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வழமையாக நெற்பயிர் அறுவடையின் பின்னர் பிரதேசத்தில் கௌபி, பயறு, சணல் போன்ற பயிரினங்களைப் பயிரிட்டு அதிக வருமானம் பெற்று வருவது வழக்கம்.

இம்முறை பயிரிடப்பட்ட பயிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளபோதும் தொடரும் வரட்சியான காலநிலையினால் பயிர்கள் கருகி உரிய பலன் கிடைக்காமல் போகும்நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.(3-122) (24)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஏப்.17

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் [illegible] துவார்.(எ-173) (39)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 01 - 02 - 1930



மறைவு 28 - 04 - 2005

### வைரவன் நல்லதம்பி

திதி: அபரபக்க சதுர்த்தி 17.04.2006

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆனாலும் உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நொத்தாரிஸ் தோட்டம்,
சிவரியோடை, கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(49457)(32-14-17)

## கேள்வி அறிவித்தல்
### வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப்பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

| பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கமுடியாத வைப்புப்பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. மிகுதி வேலை 160'X25' முதலாவது பாடசாலை வகுப்பறை அமைத்தல் | 750/- | 32,560/- | எம் 7 |

01. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும் இலங்கை தேசிய கட்டட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும் பதிவுப் புத்தகம் 2006ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.
02. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல்வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 17.04.2006ஆம் திகதியிலிருந்து 02.05.2006ஆம்திகதி நண்பகல் 12 மணிவரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் 2006ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப. 11.30 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை இலவசமாக பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி. (சி/48949)(32-17-14)

திருமதி அ.வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.


## இலங்கை மின்சார சபை மூலம்
## இலகு தவணையில் CFL பல்புகள் விநியோகம்
## உண்மையான தரமுள்ள CFL வாங்க ஒரே ஒரு வழி

யாழ்ப்பாணம், கொக்குவில் மின்சார சபையின் பிரதேச பிரிவுகளில் உள்ள மின்சார பாவனையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!!!

உயர்தர, உண்மையிலேயே 80% மின்சாரத்தைச் சேமிக்கும் CFL பல்புகளைப் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது.

★ எந்தவித முற்கொடுப்பனவும் தேவையில்லை
★ வட்டி எதுவுமின்றிய, மிக இலகு தவணை முறை
★ ஒரு வருட உத்தரவாதம்
★ SLS சான்று பெற்ற பல்புகள், ISO 9000 சான்றுபெற்ற அமையத்தின் உற்பத்தி.



விநியோக நிலையங்கள்:
1. இலங்கை மின்சார சபை, பாவனையாளர் காரியாலயம்
அரசடி றோட், யாழ்ப்பாணம்
2. இலங்கை மின்சார சபை பாவனையாளர் காரியாலயம்
K.K.S. வீதி, கொக்குவில்.

விநியோக திகதி:
17ஆம் திகதி ஏப்ரல் 2006 தொடக்கம் 30ஆம் திகதி ஏப்ரல் 2006 வரை அலுவலக நாள்களில்

நீங்கள் செய்யவேண்டியது இது மட்டுமே....

உங்கள் தேசிய அடையாள அட்டையையும் கடைசியாகப் பெற்ற மின்சாரப் பட்டியலையும் (Bill) எடுத்து வந்து மேற்குறிப்பிட்ட காரியாலயங்களிலிருந்து ஆகக்கூடியது 4 பல்புகளைப் பெற்றுச்செல்லுங்கள். உண்மையான CFL பல்புகளைப் பாவித்து, ஒழுங்கான முறையில் மின்சாரத்தைச் சேமியுங்கள். தரமற்ற பொருள்களைத் தவிருங்கள்.

PRESIDENT

(49453) (24-45-15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடம்பெயர் சேவையின் ஆரம்ப நிகழ்வில் தமிழீழ பொருண்மிய 'மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றுவதை முதலாவது படத்திலும் பாண்டியன்குளம் உதவி அரசஅதிபர் ஜெகு ஒருவருக்கு காணி உறுதி வழங்குவதையும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் பொதுமக்களின் பிரச்சினைகள் ஆராயப்படுவதையும் படங்களில் காணலாம். (படம்: மல்லாவிச் செய்தியாளர்).

# விவசாயம், காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுத்த இடம் பெயர்சேவை

மல்லாவி,ஏப்.17

வடக்கு - கிழக்கு மாகாண விவசாய, காணி, மீன்பிடி, கால்நடை, அபிவிருத்தி அமைச்சின் இடம்பெயர் சேவை துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் சி.கோகுலதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஆரம்ப நிகழ்வாக துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஈகச் சுடரேற்ற தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றினார். மாகாண விவசாயப் பணிப்பாளர் சுப்பிரமணியம் மங்கல விளக்கேற்ற துணுக்காய் உதவி அரச அதிபர் நா.நந்தகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த இடம்பெயர் சேவையில் காணித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், தெங்கு பனை அபிவிருத்திச் சபை, கிராமிய அபிவிருத்தி வங்கி, வன்னி வேளாண் சேவை நிறுவனம் ஆகியன தனித்தனிச் செயலகங்களையும் கண்காட்சி மண்டபங்களையும் அமைத்திருந்தன.

இந்த நிகழ்வில், விவசாய, காணி, மீன்பிடி, கால்நடை, அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளர் ம.தயானந்தன், உதவிக் காணி ஆணையாளர் திருமதி யசோதா உதயகுமார், மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சுப்பிரமணியம் -

கால்நடை அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் சி.கே.சிவராமலிங்கம், விவசாயத் திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவுப் பணிப்பாளர் எஸ்.தர்மராசா ஆகியோரும் உள்ளூர் அரச நிறுவன அதிகாரிகளும் கலந்துகொண்டு பொதுமக்களின் விவசாய, காணி, மீன்பிடி சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் ஆலோசனைகளும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். (எ-322)(24)

## கைவேலி கிராமத்தில் தற்காப்புப் பயிற்சி

புதுக்குடியிருப்பு,ஏப்.17

புதுக்குடியிருப்பு கைவேலி கிராமத்தில் தற்காப்புப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறியில் ஆரம்ப நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி கைவேலி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில், பொதுச்சுடரை பயிற்சி ஆசிரியரும், மாவீரரின் சகோதருமான பிரதீபன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் மலைமகள் ஏற்றினார் கருத்துரையை தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஸ்தார் நிகழ்த்தினார்.

(எ-353-202)

## முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் அபிவிருத்தித்திட்ட முன்மொழிவுஆய்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித்திட்ட முன்மொழிவு ஆய்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இது தொடர்பான நிகழ்வு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் மேம்பாட்டு செயலகப் பணிப்பாளர் எஸ். யாழமுதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சகல திணைக்களத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

குறிப்பாக வீட்டுத்திட்ட வேலைகளைத் துரிதமாக நிறைவேற்றுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை யாழமுதன் கேட்டுக்கொண்டார்.

இதில்,அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிகளும் கலந்துகொண்டனர்.

(எ353)

## குஞ்சுக்குளத்தை நன்னீர் மீன்வளர்ப்புக்கு பயன்படுத்துவதென தீர்மானம் நிறைவேற்றம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தின் சிறுகுளமான குஞ்சுக்குளத்தினை நன்னீர் மீன்வளர்ப்பிற்கான குளமாக மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

குஞ்சுக்குளம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிறு குளங்களில் முக்கியமானது.

இந்தக் குளத்தின் கீழ் 60 ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்போது இந்தக் குளத்தின் 60 ஏக்கர் நெற்செய்கை நிலம் முழுமையாக உவரடைந்துள்ளமையால் இந்தக் குளத்தில் நன்னீர் மீன்களை வளர்த்துப் பயன்பெறுவதென வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடிச் சங்கம் முடிவு செய்துள்ளது.

இதேவேளை, குஞ்சுக்குளம் கிராம விவசாய நிலம் உவரடைந்து வருவதால் இடம்பெயர்ந்துவரும் குடும்பங்களுக்குப் பிற இடங்களில் காணி வழங்க வன்னேரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

ஐயனார்புரம் பகுதியில் இவர்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-420)

# சேர்பியாவில் டெனியூப் நதி பெருக்கெடுத்தது பெல்கிரேட்டில் அவசரகாலநிலை பிரகடனம்

## பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் நகர்வு

பெல்சிரேட், ஏப்.17

பெருவெள்ளம் காரணமாக சேர்பியாவின் தலைநகர் பெல்கிரேட்டின் 10 பகுதிகளில் அவசரகாலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தென்கிழக்கு ஐரோப்பாவின் குறுக்கே பல பிரதேசங்களை பெருவெள்ளம் மூடியுள்ளது.

டெனியூப் நதி பெருக்கெடுத்திருப்பதால் பெல்கிரேட்டுக்கு அருகில் சிமெடெரேவோ நகரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பத்திரமான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர். வேறு நான்கு ஆறுகளும் பெருக்கெடுத்து ஆபத்து நிலையைக் கடந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தைத் தடுப்பதற்காக இராணுவமும் பொது அமைப்புகளும் அரண்களை அமைத்துவருகிறார்கள். டெனியூப் நதி வினாடிக்கு 16 ஆயிரம் கன அடிவீதம் பாய்வதாகவும் ஏப்ரல் மாதத்தின் அதன் வழமையான விகிதத்தைவிட இது இரண்டுமடங்கு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1895ஆம் ஆண்டுக்குப்பிறகு டெனியூப் நதி மிக உயர்மட்டத்துக்கு எழுந்து பாய்கிறது. ரொமானியாவில் உறைபனி கரையத் தொடங்கி ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு பால்கன்ஸ் பிரதேசத்தில் 12 பேர்வரை மரணமானதையும் வயல் நிலங்கள் அழிந்தமையையும் மனதில்கொண்டு அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ப)

## எகிப்தில் கலவரம்

அலெக்சாண்டிரா, ஏப்.17

எகித்தில் புனித வெள்ளி தினத்தன்று அலெக்சாண்டிரா நகரில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தினுள் கிறிஸ்தவர் ஒருவர் கொலையுண்ட சம்பவத்தை அடுத்து அங்கு கலவரம் மூண்டிருக்கிறது.

தேவாலயம் ஒன்றினுள் இடம்பெற்ற சம்பவத்தில் புனித வெள்ளிப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த 78 வயதான முதியவர் ஒருவரை முஸ்லிம் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக்கொன்றதை அடுத்தே அங்கு கலவரம் மூண்டது.

கொல்லப்பட்ட முதியவரின் மரணச் சடங்கு ஊர்வலத்தில் கலந்துகொண்ட கிறிஸ்தவர்களுக்கும் மற்றொரு குழுவினருக்கும் இடையே மூண்ட மோதல் கலவரமாக மாறியது. (ஐ)

## அ.தி.மு.க. பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சி அமைக்கும்!

### வேட்புமனுத் தாக்கல் செய்தபின் ஜெயலலிதா தெரிவிப்பு

மதுரை, ஏப்.17

சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. பெரும்பான்மை பெற்று மீண்டும் ஆட்சிக்கு வரும். அதைத்தான் தமிழக மக்கள் விரும்புகிறார்கள்.

முதல்வர் ஜெயலலிதா இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிடுவதற்கான தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அத்தொகுதியின் தேர்தல் அலுவலர் சு.சூரியநாரயணனிடம் சனிக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்த பின் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க வின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது. அ.தி.மு.க. தலைமையிலான ஜனநாயக மக்கள் கூட்டணி மொத்தமுள்ள 234 தொகுதிகளில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றிபெறும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை - என்றார் அவர்.

சில கருத்துக்கணிப்புகளில் மிகக் குறைந்த வித்தியாசத்தில் அ.தி.மு.க கூட்டணி முன்னணியில் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளதே என செய்தியாளர்கள் கேட்டனர்.

இதற்குப் பதிலளித்த ஜெயலலிதா " இக்கணிப்புக்கு மாறாகத் தேர்தல் முடிவு இருக்கும். தமிழக வாக்காளர்கள் எப்போதும் தெளிவான முடிவை வெளிப்படுத்துவதற்குப் பெயர் பெற்றவர்கள். இத்தேர்தலிலும் தெளிவான முடிவைத் தருவார்கள்" என்றார்.(ஐ)

## தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும்: கருணாநிதி

கும்பகோணம், ஏப்.17

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும்; நல்லாட்சி மலர ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச்செய்ய வேண்டும் என்றார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

"தமிழகத்தில் நடைபெறும் ஆட்சிமாற்றப் படவேண்டும் என்ற எண்ணத்திலேயே திமுக தலைமையில் கூட்டணி அமைத்துள்ளது. ஜெயலலிதா மீது தனிப்பட்ட கோபம் கிடையாது. அவர் முதல்வராக இருப்பதால் பொறாமையோ எரிச்சலோ கிடையாது. நம்முடைய முதலமைச்சர் யார் என்று கேட்டால் கூச்சம், வெட்கம் இல்லாமல் கூறும் நிலை வேண்டும். அரசியல் பண்பாடு, நாகரிகம் கொண்டவர் முதல்வராக இருக்கவேண்டும்.

முதல்வர் தான் சொல்லியதைக் கடைப்பிடிக்கவில்லை. தமிழக சட்டப்பேரவையில் பெயருக்கு முன்னதாக அம்மா பெயரின் முதல் எழுத்தைப் போட்டுக்கொள்ள சட்டம் கொண்டுவந்தார். ஆனால், அவரின் பெயருக்கு முன்னால் அம்மா பெயரைப் போட்டுக்கொள்ளவில்லை. அதுக்குத்தான் அறிவுரை - என்றார் கருணாநிதி. (ஐ)

## அமைச்சர் அர்ஜுன் சிங்கின் பேரனை மணக்கிறார் தேவயானி ரானா



நேபாள மன்னர் குடும்பம் அடியோடு சுட்டுக் கொல்லப்பட்ட போது தேவயானி ரானா என்ற இளம் பெண்ணின் பெயர் பலமாக அடிபட்டது. அந்த தேவயானி ரானாவுக்கு விரைவில் திருமணம் நடக்க உள்ளது. மத்திய அமைச்சர் ஒருவரின் பேரனை அவர் திருமணம் செய்யவுள்ளார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் உலகை உலுக்கி போட்ட சம்பவம் அது. நேபாள மன்னர் குடும்பத்தில் சந்தோஷமும், மகிழ்ச்சியும் பொங்கி இருந்த நேரம். 2001ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி மன்னர் குடும்பத்துக்கு கேடு பிறந்தது. இளவரசர் தீபேந்திரா குடிபோதையில் தனது தந்தை மன்னர் பீரேந்திரா, தாய் ராணி ஐஸ்வர்யா உட்பட பல குடும்ப உறுப்பினர்களை சுட்டுக்கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் நேபாளத்தை மட்டுமல்ல உலகிற்கே பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தப் படுகொலைகள் தொடர்பான விசாரணை நடந்தபோது தேவயானி ரானா என்ற இளம் பெண்ணின் பெயர் பலமாக அடிபட்டது. அந்த நேரத்தில் அந்தப் பெண் இந்தியாவில் தங்கியிருந்தார். தேவயானி ரானாவுக்கும் இளவரசர் தீபேந்திராவுக்கும் காதல் இருந்தது. இதற்கு மன்னர் குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததால் இளவரசர் தீபேந்திரா கடும் கோபம் அடைந்து இந்த அளவுக்கு மோசமாக நடந்து கொண்டார் என்று கூறப்பட்டது.

தேவயானி ரானாவின் குடும்பத்தினரும் நேபாள நாட்டைச் சேர்ந்தவர்களே. 1951ஆம் ஆண்டு வரை அந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள். மறைந்த காங்கிரஸ் தலைவர் மாதவராவ் சிந்தியாவுக்கு தேவயானி ரானா ஒரு வகையில் உறவினர். தீபேந்திரா தற்கொலை செய்து கொண்டதால் தேவயானி ரானாவுக்கு விரைவில் திருமணம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவரை திருமணம் செய்யப்போகிறவர் அஷ்வர்யா சிங். இவர் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அர்ஜுன் சிங்கின் மகளின் மகன். அதாவது அர்ஜுன் சிங்கின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

கண்டி வீதி, பளையில் தென்னை, பனைகளுடன் உள்ள 2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. நேரில் வரவும். தொடர்பு: தா.சுவாமிநாதன், பெரியபளை, பளை. (49509)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குழிப் பகுதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 6181216 (49539)

## மணப்பெண் தேவை

இந்து கௌரவ குடும்பம் சொந்தமாக வியாபாரம் செய்யும் 37 வயது மணமகனுக்குத் தகுந்த மணப்பெண் தேவை. ஜாதகம் புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். திருமதி சாந்தி இரத்தினகுமார், கலைவாணி வீதி, வடலியடைப்பு. (தரகர்கள் தேவையில்லை). (49402)

## கெட்டிக்காரர்கள்-இமயம்

பேராதனைப் பல்கலைக்கழக நாடகப் பணியின் தொடர்ச்சியாக கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய 21 நவீன நாடகங்கள் கொண்ட இரண்டு நூல்கள், மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமானவை. (49495)

## தவறிவிட்டது

செல்வரத்தினம் ஜேமிஸ்பொண்ட் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (782143069V), விஷேட அடையாள அட்டை (0902006177), வாகனப்பத்திரம் என்பன யாழ்ப்பாணத்திற்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.387, நாவலர் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் or 0779591207, 077 6669092 என்ற T.P. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (49522)

அல்வாய் வடக்கைச் சேர்ந்த விமலநாதன் நீலாம்பரி என்பவருடைய தே.அ. அட்டை (837473349V) அல்வாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். T.P 077 6599844 அல்லது "தங்கநிலா", அல்வாய் வடக்கு என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (49523)

19/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியை உடைய சிவகௌரி சிவரூபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (708230464V) ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி ஒழுங்கை மற்றும் சுற்றாடலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். அல்லது 021222 8276 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (49542)

## வைத்தியர் தேவை

DAM அல்லது BSMS பட்டதாரி வைத்தியர் தேவை.

தொடர்புகளுக்கு: -
நடனமுருகன் வைத்திய நிலையம்
222, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(49544) (27-32-11-14)

S.K.M.A. கழகத்தினால் 14.04.2006 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

முதலாம் பரிசு இல: 2463
இரண்டாம் பரிசு இல: 2982
மூன்றாம் பரிசு இல: 3095 மற்றும்
ஆறுதல் பரிசுகள்இல: 3001, 2960, 2886, 2651, 3169

ஒருவார காலத்திற்குள் தங்களுக்குரிய பரிசில்களை பெற்றுக்கொள்ளவும்.
S.K.M.A., 408, பிரதான வீதி, யாழ்ப்பாணம். நிர்வாகம். (49541) (32-11-14)

"DADI"
வோட்டர் பம்ப்




சென்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்
324 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 112324261, பெக்ஸ் 112446864

நாராயண கட்டிடப் பொருட்கள் வர்த்தகர், 95ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

## Book Binders தேவை

Book Binders தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிபெற விரும்புபவர்களுக்கும் இடம் உண்டு. நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 07 - 04 - 1941



உதிர்வு 17 - 04 - 2005

அமரர் கார்த்திகேசு குலேந்திரன் (ராசா)

இன்று (17.04.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி வீதி,
கூழாவடி, ஆனைக்கோட்டை.
குடும்பத்தினர்.
(சி/48970) (33-32-11-45)

## கண்ணீர் அஞ்சலி



சவிரிமுத்து அன்ரனிதாசன் (ராசன்)

09.04.2006 நோர்வேயில் காலமான எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய சவிரிமுத்து அன்ரனிதாசன் அவர்களின் இழப்பு எமக்கு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
டாக்டர் எமலியான்ஸ்
குடும்பத்தினர்.
மெமோறியல் [illegible]ன்,
மானிப்பாய். (49545) (39-32-11-14)

## மரண அறிவித்தல்

சவிரிமுத்து அன்ரனிதாசன் (ராசன்)



மானிப்பாய் வடக்கு மெமோறியல் வீதியைப் பிறப்பிடமாகவும். நோர்வே (ஸ்ரவங்கர்) ஐ வதிவிடமாகவும் கொண்ட சவிரிமுத்து அன்ரனிதாசன் அவர்கள் 09.04.2006 அன்று நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவிரிமுத்து, நேசம்மா தம்பதியரின்அன்பு மகனும். யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லதம்பி, நாகம்மா தம்பதியரின் மருமகனும் சுலோசனாவின் (வவா) அன்புக் கணவரும் ஜெனிபரின் பாசமிகு தந்தையும் சூசைமுத்து (மானிப்பாய்), வேவி சறோஜா (நோர்வே), புஸ்பராணி (மானிப்பாய்), லில்லிமலர் (கனடா), யசிந்தாறமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானேஸ்வரி (அனலைதீவு), நோபேட் (நோர்வே), மரியநாயகம் (மானிப்பாய்), அன்ரனிதாசன் (கனடா), இராஜேஸ்வரன் (கனடா), லலிதா (கனடா), மாலா (நாச்சிமார்கோயிலடி), இந்திரன் (சுவீஸ்), சந்திரன் (சுவிஸ்), சீலன் (பிரான்ஸ்), வனஜா (சுவிஸ்), செல்வன் (கொழும்பு), தீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஜெயந்தன் (நோர்வே), மேரிஸ்ரேலா (கனடா), யசோதா (நோர்வே), கனுசன் ருசித்தா (கனடா), நுஷாந்தினி ஸரவனி ஜெனி (கனடா) ஆகியோரின் மாமனாரும் விஜீதா, நீகன், தினேஸ்குமார், பாமா (அனலைதீவு) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் நாளை(18.04.2006) செவ்வாய்க்கிழமை நோர்வே நேரப்படி பிற்பகல் ஒரு மணிக்கு நோர்வே ஸ்ரவங்கரில் இடம்பெறும்.

அன்னாரின் நினைவு அஞ்சலியாக மெமோறியல் வீதி மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நாளை 18.04.2006 பிற்பகல் 4.30 மணிக்கு ஜெப ஆராதனை நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெமோறியல் வீதி,
மானிப்பாய் வடக்கு. (49543) (27-32-11-14)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகருக்கான பிரதேச சபை வைபவரீதியாக அங்குரார்ப்பணம்

காரைநகர்,ஏப்.17

புதிதாக உருவாக்கப்பட்ட காரைநகர் பிரதேச சபையின் அலுவலகத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காரைநகர் சக்கலாவோடையில் உள்ள கட்டடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அலுவலக கட்டடத்தைத் திறந்துவைத்து அலுவலகப் பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம், ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன், நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் திட்ட முகாமையாளர் எஸ்.பாரதிதாசன் ஆகியோரும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இதுவரை காலமும் ஊர்காவற்றுறை பிரதேச சபையுடன் இணைந்திருந்த காரைநகர் கடந்த 15ஆம் திகதிமுதல் தனியான பிரதேச சபையாக செயற்பட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேச சபையின் முதலாவது செயலாளராக எஸ்.லோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை - நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் காரைநகர் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் விநியோகத் திட்டத்தின் காரைநகர் வடக்கிற்கான குடிதண்ணீர் விநியோகத்தையும் அன்றையதினம் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆரம்பித்து வைத்தார். (எ-73)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.17

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும் கலையகம் ச.ச. நிலையமும் இணைந்து அரியகுட்டி நினைவாக நடத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

* ஆவரங்கால் மத்திய வி.க. எதிர் அச்சுவேலி வி.க.
* ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. எதிர் அரியாலை ஐ.வி.க.(3)

* * *

வலி.வடக்கு,ஏப்.17

யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று காலை முதல் இடம்பெறவுள்ளன.

17,19 வயதுப்பிரிவினருக்கு இடையே இடம்பெறும் இப்போட்டிகள் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் பொதுவிளையாட்டு மைதானம் என்பவற்றில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8 மணிமுதல் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

* சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
* சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி. (3-86)

# கவிஞர் செல்லையாவின் நினைவாக நூற்றாண்டு மலர் வெளியிட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.17

அல்வாயூர் கவிஞர் புலமையாளர் மு.செல்லையாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இணைத்தலைவர்களில் ஒருவரான சமாதான நீதிவான் மா.அனந்தராசன் தெரிவித்தார்.

அமரர் கவிஞர் மு.செல்லையாவினால் எழுதப்பட்டு 1950இற்கு முன்னர் ஈழகேசரி, கலைச்செல்வி ஆகியவற்றில் பிரசுரமான அன்னாரின் ஆக்கங்களை (கவிதை, கட்டுரை, சிறுகதை) வைத்திருப்பவர்கள் 'மா.அனந்தராசன், தெய்வீகம் மனோகரா, அல்வாய் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில் 11 - 07 - 1978



ஆண்டவன் கைகளில் 15 - 04 - 2006

தேவராசா மரியதாஸ் (கண்ணன்)

அநியாயமான உன் அழிப்பு
ஆண்டவன் சந்நிதானத்தில்
நீதியோடு தீர்க்கப்படும்
அப்பாவியான உன் இறப்பு
அன்பர்கள் எமக்கு பேரிடியானது
வாழவேண்டிய உன்
வயதினை எண்ணி நாங்கள்
பேதைபோல் புலம்புகின்றோம்
கண்ணா எம் அழுகுரல்கள் கேட்கிறதா
கண்விழித்து காதுகொடுத்து கேட்காயோ
விடை பகருகின்றோம் ஈரவிழிகளுடன்...

(49557) (18-32-11-45)
முனை நண்பர்கள்.

# முத்தரப்புக் கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ். பல்கலை அணி சம்பியன்

பேராசிரியர் பிரியத்த விஜயதுங்க ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக மொறட்டுவப் பல்கலைக்கழகத்தினால் அழைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட முத்தரப்பு கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது.

இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி ஜெயவர்த்தன புர பல்கலைக்கழக அணியினர் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயரங்கா, ஜனாகா ஆகியோர் முறையே 36, 27 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சர்வானந்தா 4 விக்கெட்டுகளையும் செந்தூரன், மணிவண்ணன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அருள்ராஜ், பந்துலன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

115 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களமிறங்கிய யாழ். பல்கலைக்கழக அணி இரண்டு விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ரஜீவன், சர்வானந்தா, மணிவண்ணன், ஜெயந்தன் ஆகியோர் முறையே 31, 38, 12, 16 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பியங்கற, குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

யாழ். பல்கலைக்கழக அணி வீரன் சர்வானந்தா ஆட்டநாயகனாகவும் தொடர் நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த துடுப்பாட்ட நாயகனாக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த றஜீபன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)(33)



ஸ்கந்தபுரம் புனித அந்தோனியார் முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் இடம்பெற்ற வினோத உடைப் போட்டியில் மஹிந்த ராஜபக்ஷவின் தோற்றத்தில் தோன்றி முதலிடம் பெற்ற சிறுமி யோ.சங்கனி. *(படம்: ஸ்கந்தபுரம் செய்தியாளர்)*

## கரபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். வலயமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான 15,17,19 வயதுப் பிரிவினருக்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

முடிவுகள் வருமாறு:-

**ஆண்கள்**

**19 வயதுப் பிரிவு** - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி.

**17 வயதுப் பிரிவு** - ஆவரங்கால் மகாஜனா வித்தி., அச்சுவேலி மத்திய கல்லூரி, புத்தூர் சிறிசோமஸ்கந்தா கல்லூரி.

**15 வயதுப் பிரிவு** - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி, புத்தூர் சிறிசோமஸ்கந்தா கல்லூரி, ஆவரங்கால் மகாஜனா வித்தி.

**பெண்கள்**

**17 வயதுப் பிரிவு** - நடராஜ இராமலிங்க வித்தி., புத்தூர் சிறிசோமஸ்கந்தா கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**15 வயதுப் பிரிவு** - அச்சுவேலி மத்திய கல்லூரி, நடராஜ இராமலிங்க வித்தி, யாழ். வேம்படி மகளிர் பாடசாலை. (3-190)(33)



## கோப்பாய் பிரதேச உதைபந்தாட்டம் உரும்பிராய் உதயசூரியன் வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.17

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் உரும்பிராய் உதயசூரியன் வி.க. வெற்றியீட்டியுள்ளது.

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரண்டு அணியினரும் எதுவித கோலினையும் அடிக்காததினால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

ஆட்டம் வெற்றிதோல்வி காண்பதற்காக சமநிலை உடைப்பு வழங்கப்பட்டது.

உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது. (3-190)(33)

## கபடிச்சுற்றுப் போட்டி பாடும்மீன் இருபிரிவிலும் முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ். பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிச்சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தில் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 63: 17 என்ற புள்ளி அடிப்படையில் குருநகர் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது. இந்த ஆட்டத்தில் சிறந்த வீரனாக பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கஜஸ்மன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

பாடும்மீன் விளையாட்டுக்கழகஅணி 30: 22 புள்ளி அடிப்படையில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

இந்த ஆட்டத்தில் சிறந்த வீராங்கனையாக பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியைச் சேர்ந்த எஸ். சோபியா தெரிவுசெய்யப்பட்டார். (3-190)



பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவிலில் மாவீரர் முன்பள்ளிகளின் விளையாட்டுவிழாவில் சிறுவர்கள் கடற்பயிற்சியில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## நல்லூர் பிரதேச கரபந்தாட்டம் அரியாலை வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.17

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

கொண்டலடி ஞானவைரவர் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் மோதியது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:20, 25:10 என்ற இரு நேர் செற்கணக்கில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது.

சிறந்த வீரனாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.கதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

## மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். அணிகள் மாகாணச் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஏப். 17

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட மாவட்டங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந் தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணி வெற்றி பெற்றது.

யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணி மோதியது.

யாழ். மாவட்ட அணி 3:0 என்ற புள்ளி அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட அணியை வெற்றிகொண்டு சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணி மோதியது.

யாழ். மாவட்ட அணி 3:0 என்ற புள்ளி அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட அணியை வெற்றி கொண்டு சம்பியனானது.

இந்த இறுதியாட்டத்திற்கு பிரதம விருந்தினராக யாழ். வை.எம்.சி.ஏயின் விளையாட்டுத்துறை தலைவர் டி.ஆர். அருமை நாயகமும் அவருடைய பாரியார் மீனா அருமை நாயகமும் கலந்து கொண்ட னர். (3-190)

## துணுக்காய் கல்வி வலயத்தில் முதன்மை வீரர்களாக தெரிவானோர்

மல்லாவி,ஏப்.17

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் முதன்மை வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கனகரத்தினம் பிரதம விருந்தினராகவும் -

தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் ஒவ்வொர் பிரிவிலும் முதன்மை வீரராகத் தெரிவுசெய்யப்பட்டவரின் விவரம் வருமாறு:-

**11 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - ஆர் கஜானன் - அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்.

**பெண்கள்** - ஆர்.மிதுலா - முத்துஐயன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை.

**13 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - ரி.சயந்தன் - முத்து ஐயன் கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை.

**பெண்கள்** - கே.சஜீவனா - முத்து ஐயன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை.

**15 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - எஸ்.செந்தூரன் - கரிப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலை.

**பெண்கள்** - எஸ்.பபிதா - துணுக்காய் அ.த.க. பாடசாலை.

**17 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - ரி.இன்பநாதன் - கற்சிலை மடு அ.த.க. பாடசாலை.

**பெண்கள்** - கே.றேணுகா - கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.

**19 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - கே.ஜங்கரன் - மல்லாவி மகா வித்தியாலயம்.


**பெண்கள்** - வி.விஜெயந்தினி - பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்.

**21 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - எஸ்.விஜிதரன் - மல்லாவி மத்திய கல்லூரி.

**பெண்கள்** - [illegible] - பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்.

(3-322-203)



[illegible] சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கனடா நந்தர் சோதிட ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் அன்மையில் அதிபர் மா.மெய்யழகன் தலைமையில் நடைபெற்றது. இப் போட்டியில் இசையும் அசைவும் நிகழ்வில் பங்கு பற்றியோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டில் உங்கள் பலன் எப்படி?

## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1**

**சிவபெருமானின் கருணைப் பார்வை பெற்றுள்ள சிம்ம ராசி அன்பர்களே!**

புத்தாண்டில் எந்தத்துறையிலும் கூடுதல் கவனம் செலுத்தி தகுந்த நற்பலன் கிடைக்கப் பெறுவீர்கள். உதவிபுரியும் நல்லவர்களை இனம் கண்டு பழகி அவர்கள் துணையுடன் கூடுதல் நன்மைகளை அடைவீர்கள்.

வீடு, மனையில் மனநிறைவு தரும் மங்கல நிகழ்ச்சிகள் உண்டாகும். புத்திரர்கள் உங்களின் செயற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு தனக்குத் தெரிந்த புதிய கோணத்தில் கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள். பூர்வ புண்ணிய நற்பலன்கள் உங்களுக்கு ஆதாயம் தருவதான நிகழ்வுகளை உருவாக்கித்தரும். கணவன், மனைவி ஒற்றுமை சிறப்பான இடத்தில் இருந்து வரும். சுக சௌகர்ய வாழ்க்கை வசதிகள் நிறைவான வகையில் இருக்கும். தந்தைவழி உறவினர்கள் குருவுக்கு நிகரான மனநிலையுடன் உங்களுக்குத் தகுந்த ஆலோசனை தருவார்கள்.

ஆலோசனை நுட்பங்களை ஆராய்ந்து செயல்படுத்தி செயல்களில் தகுந்த வெற்றி பெறுவீர்கள். புதுர்வர்க்க நற்பலன்களைப் பெற ஆத்மசாந்திப் பரிகாரங்கள் நடத்தி நற்பலன்கள் பெறலாம். தொழில், வியாபாரம், உத்தியோகம் போன்றவற்றில் உங்களின் செயற்பாடுகள் பிறருக்கு புரியாத புதிர்போலத் தோன்றலாம். இருப்பினும், உங்களது திறமையான செயற்பாடுகள் வெளிப்படும்போது மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

ஆதாய வருமானங்கள் சேமிப்பின் வளர்ச்சிக்கு உதவும். வெளியூர் பிரயாணங்களில் செலவுகளை திட்டமிடுவதால் பற்றாக்குறைகளை தவிர்க்கலாம். குடும்பத்தில் சுபமங்கல செலவு தரும் நற்காரியங்கள் நிகழும். வெளிநாட்டு வேலை வாய்ப்பில் நம்பகத்தன்மையை உறுதிசெய்து செயற்படவும்.

மின்னணு சாதனங்கள், மின்சார உபகரணங்கள், சமையலறை சாதனங்கள், ரீ.வி., பஞ்சு, பருத்தி ஆடைகள் போன்றவை உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் தங்கள் தொழிலில் வளர்ச்சி பெற அரச உதவியும் சலுகைகளும் பெறுவார்கள்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் தங்களின் ஒருங்கிணைந்த செயல் திறமைகளை வளர்த்துக்கொண்டு நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவார்கள். தங்கள் கூடுதல் உழைப்பால் நிர்வாகத்தை வளர்ச்சி பெறச் செய்து தங்களுக்கு தேவையான பணி உயர்வு, இடமாறுதல், சம்பள உயர்வு போன்ற நன்மைகளைப் பெறுவார்கள். தனியார் பணியாளர்களுக்கு சம்பள உயர்வுக்கு வாய்ப்பிருக்கிறது.

தங்கநகை, புடைவை வியாபாரிகள் ஆண்டின் பிற்பகுதியில் ஓரளவு இலாபம் ஈட்டலாம். உணவுப்பொருள், மின்சாதன உபகரணங்கள், ஓவி யங்கள், இசைக்கருவிகள், வீட்டு அலங்கார மின்விளக்கு கள், அழகு சாதனங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், நகைகள் ஆகியவற்றை விற்பனை செய்பவர்கள் வாடிக்கையாளர் களைப் புதிதாய் பெற சலுகை தரும் யுக்திகளைப் பின்பற்றி நல்வளர்ச்சி பெறுவார்கள்.

அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் சக பெண் பணியாளர்களின் தகுந்த ஒத்துழைப்பைப் பெற்று தங்கள் பணியில் சிறப்பான முத்திரை பதிப்பார்கள். அதிகாரிகள் மற்றும் நிர்வாகத்திடம் உங்கள் செயல்

திறனில் நம்பிக்கையும் கூடுதல் மதிப்பீடுகளும் ஏற்படும். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் தங்கள் மனக்குறைகளை உறவுப் பெண்களிடம் ஆலோசனை செய்து தகுந்த முறையில் குடும்ப வளர்ச்சியைப் பேணிப் பாதுகாப்பார்கள்.

கை நிமிர்ந்த பெண்கள் வெளி இடங்களுக்கு செல்லும் போது நம்பகமான உறவினர்களின் பாதுகாப்பு அவசியமாகும். சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழில் புரியும் பெண்கள் தங்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவும் நல்லவர்களைக் கண்டறிந்து பயன்படுத்தி முன்னேற்றமான வாழ்வுதரும் நிலையைப் பெறுவார்கள். பொருளாதார வரவினங்கள் கிரக நல்லருளால் அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை மனம் மகிழ்வு பெறும் வகையில் கிடைக்கும்.

மின்னணு சாதனங்கள் பழுது நீக்குதல், உருவாக்குதல், ஓவியம் வரைதல், இசைக்கருவிகள் இயக்குதல், மோட்டார் வாகன கட்டுமானம், மருத்துவம், ரசாயனம், கணனி, நாடகம், நடிப்பு, விவசாயம் ஆகிய துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்களின் ஒருமுகத் திறமையால் படிப்பல் நல்ல தரத் தேர்ச்சி பெறுவார்கள்.

ஆரம்ப, உயர்நிலை மாணவர்களின் படிப்பல் சற்று தேக்கம் தெரியும். கடும் முயற்சி செய்தால் ஆண்டின் பிற்பகுதியில் சாதித்து விடலாம். படிப்புக்குத் தேவையான பொருளாதார வசதிகள் காலதாமதமாகக் கிடைத்தாலும் விடாமுயற்சியுடன் படிப்பில் ஆர்வத்துடன் செயற்படுவார்கள். சக மாணவர்கள் தங்களால் ஆன உதவிகளை மனமுவந்து வழங்குவார்கள். சாகச விளையாட்டுகளில் ஈடுபடும் மாணவர்கள் தகுந்த பயிற்சிகளைப் பின்பற்றி அனைவரும் வியக்கும் சாதனை நிகழ்த்துவார்கள். தந்தை, மகன் உறவுநிலை குருசிஷ்யன் தன்மையில் உயர்வாக இருக்கும்.

**பரிகாரம்:** கபால வைரவரை அஷ்டமி நாளில் உரிய வழிபாடுகள் செய்வதால் எதிர்த்தளங்கள் விலகி நற்செயல்களில் வெற்றி பெறுவீர்கள்.

## கன்னி

**உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1,2**

**பரமேஸ்வரியின் அருள்பார்வைப் பலம் பெற்ற கன்னி ராசி அன்பர்களே!**

தொடங்கும் புத்தாண்டில் தெய்வ அனுகூல பலம் பெற்று உங்களின் வாழ்க்கைத் தேவைகளின் முக்கிய அம்சங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். செயற்பாட்டுத்திறன் மந்த கதியில் இருந்தாலும் புதிய உத்வேகத்தைப் பற்றி சரியான திசையில் வெற்றிநடை போடுவீர்கள். பேசும் வார்த்தைகளில் ஞானத்தின் வளர்ச்சியும் அனுபவத்தின் படிப்பினையும் கலந்திருக்கும்.

உங்கள் சொல்லுக்கு சமூகத்தில் உரிய மரியாதை கிடைக்கும். பணவரவுகள் தேவைகளுக்கேற்ப சரியான சமயத்தில் கிடைத்து மனமகிழ்வைத் தரும். இளைய சகோதரர்கள், தகுந்த உதவியும் நிறைய நம்பிக்கையும் தருவார்கள். வீடு, மனை போன்றவற்றில் ஆதாயம் தரும் வகையிலான நற்பலன்கள் கிடைக்கும். தாயின் ஆலோசனை தரும் வார்த்தைகள் தகுந்த செயற்பாட்டு வளர்ச்சியைத் தரும்.

புத்திரர்கள் தங்கள் மனம் போல் திரிய மார்க்கமுண்டு. அவர்களின் செயல்களைக் கண்டறிந்து நல்வழிப்படுத்துவது நன்மையைத் தரும். குலதெய்வ வழிபாடுகளை முறைப்படுத்தி நடந்துகொள்வதால் கூடுதல் நன்மையைப் பெறலாம். பூர்வ சொத்துக்களில் வருமானம் பெறுபவர்கள் நம்பகமான நபர்களிடம் பராமரிக்கச் செய்வதால் மட்டுமே சிரமங்களைத் தவிர்க்க முடியும். கடன் தொந்தரவு உடையவர்கள் தொழில் சார்ந்த எதையும் ஈடாகக் கொடுப்பதைத் தவிர்ப்பதால் நன்மை உண்டு. எதிர்மனப்பான்மையுடன் செயற்பட்டவர்கள் உங்களின் சமயோசித நடவடிக்கைகளைக் கண்டு விலகிப்போவார்கள். கணவன், மனைவி ஒற்றுமை சிறு தொந்தரவு தந்தாலும் குரு, ராகு, கேது பெயர்ச்சிக்குப் பின் வளமான நன்நிலை உருவாகும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவிக்கரமாகச் செயற்படுவர். உடல் ஆரோக்கியம் சீரான நிலையில் இருக்கும். தந்தை வழி உறவினர்கள் மத்தியில் இருந்த மனக்குறைகள் விலகி நல்லவிதமான நம்பிக்கை வளரும். வாழ்க்கை முறையில் சிக்கனத்தைக் கடைபிடித்துப் பொருளாதார செலவினங்களை குறைப்பீர்கள். தொழில், வியாபாரம், உத்தியோகம் போன்றவற்றில் எதிர்பார்த்த உயர்வு தரும் பலன்கள் சிறப்பாக நடைபெறும். மூத்த சகோதரர்கள் உங்களிடம் சிறியவகை உதவிகளை எதிர்பார்க்கலாம். உங்களால் இயன்ற அளவு உதவுங்கள். திருமண வாய்ப்புகள் கைகூடும். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு வருடப் பிற்பகுதியில் அனுகூலம் தருவதாக அமையும்.

கல்வி நிறுவனம் நடத்துபவர்கள், அச்சகம், காகிதத் தொழிலில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை எளிதில் பெறுவார்கள். தென்னங்கன்று உற்பத்தி, மரத்தளபாட வேலை செய்வோர், மரச் சாமான்கள் உற்பத்தி, தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்துபவர்களின் சமூக அந்தஸ்து உயரும். எலக்ட்ரோனிக்ஸ் துறை சார்ந்தவர்களுக்கு சுமாரான வருமானம் கிடைக்கும். குடும்ப உறவினர்கள், அன்பு கலந்த நன்நிலையில் நடந்துகொள்வார்கள். பூர்வ சொத்து வருமானம் அதிகரிக்கும்.

அரச பணியாளர்கள் தங்கள் செயல்திறனை வளர்த்துக் கொள்ள சக நட்பு பணியாளர்களின் உதவியைக் கேட்டு பெறுவதால் நன்மை உண்டு. தனியார் பணியாளர்கள் ஏற்கனவே இருந்த இடம் தேவையில்லையே என்று நினைக்கும் மன பாவம் கொள்வர். அவர்களின் வரவுகளில் தற்போதைய நிலையே நீடிக்கும். பணவரவு தேவைக்கேற்ப கிடைக்கும். சரியான வகையில் பணம் செலவழிப்பதால் மனம் மகிழ்ச்சி பெறும். உங்கள் சொல்லிலுள்ள நியாயமும், உபதேசத் தன் மையும் கலந்து பிறரைக் கவரும். இளைய சகோதரர்கள் அனுகூலமாக செயற்படுவார்கள். வீட்டில் நிம்மதியாக வாழும் வழிமுறைகளை அமைத்துக் கொள்வீர்கள். வணிக வரி, வருமானவரி ஆகியவற்றை நிறுவனங்கள் சார்பில் தணிக்கை செய்யும் பணியில் உள்ளவர்கள் கூடுதலான வேலைவாய்ப்புப் பெறுவார்கள். கல்வித்துறை நிறுவனங் களில் பணிபுரிபவர்கள் தங்கள் செயல்திறமைகளை வளர்த் துக்கொண்டு நிர்வாகத்திடம் நற்பெயரும் சலுகைகளும் பெறுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சூழ்நிலைகள் நிலவும்.

அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் தங்களின் செயற்பாட்டுத்திறனை வளர்த்துக்கொள்ள சக பணியாளர்களின் உதவியைக் கேட்டுப் பெறுவார்கள். நிர்வாகத்தின் பார்வை உங்களின் பணி சிறப்புப் பெறுவதை எதிர்நோக்கியே இருக்கும். கணிசமான பணக்கடன் பெறுவதோ, ஈடு போன்றவைகளுக்கு உடன்படுவதையோ தவிர்ப்பது நலம். குடும்ப நிர்வாகம் கவனிக் கும் பெண்கள் பொருளாதார செலவினங்களைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தி நிம்மதி நிறைந்த குடும்பவாழ்வைப் பேணி நடப்பார்கள். உறவினர்களின் அன்பு கலந்த ஆதரவு கிடைக்கப்பெற்று எதிர்கால வாழ்வில் நம்பிக்கை வளர்ப்பீர்கள். சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழில் புரியும் பெண்கள் நியாய தர்மங்களைக் கடைபிடித்து நற்பெயரும் புதிய வாடிக்கையாளர்களும் கிடைக்கப் பெறுவார்கள். திருமண வாய்ப்பு எதிர்பாப்பவர்களுக்கு அனுகூல நற்பலன் விரைவில் ஏற்படும்.

விவசாயம், இலக்கிய ஆராய்ச்சி படிப்பு, ஆசிரியர் பயிற்சி, இயந்திர தொழில்நுட்பப் பயிற்சி, சட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் தங்கள் படிப்பல் கூடுதல் திறமைகளை வளர்த்துக்கொண்டு சிறந்த தரத் தேர்ச்சி பெறுவார்கள். இன்ஜினியரிங், மருத்துவம், சிற்பங்கள் வடிவமைத்தல், ஜோதிட ஆராய்ச்சி, தொல்பொருள் ஆராய்ச்சி, விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி படிப்பு சார்ந்த மாணவர்கள் தங்கள் தனித்திறமைகளை ஒழுங்குபடுத்தி ஆசிரியரிடம் நற்பெயர் பெறுவார்கள். ஆரம்ப, உயர்நிலை மாணவர்களின் படிப்பில் கவனம் செலுத்தி பெற்றவர்களிடம் நற்பெயர் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்புக்குத் தேவையான பணவசதி நிறைவாகக் கிடைக்கும். தந்தை, மகன் உறவுநிலை சிறப்பாக இருக்கும். சுற்றுலா பயணம் செல்லுமிடங்களில் தகுந்த பாதுகாப்பைப் பின்பற்றுவது நல்லது.

**பரிகாரம்:** சப்த கன்னியர்களை வழிபாடு செய்வதால் நலமும், வளமும் பெற்று வாழலாம்.

## துலாம்

**சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3**

**பகவான் ஐயப்பனின் அன்புக்குப் பாத்திரமான துலாம் ராசி அன்பர்களே!**

புத்தாண்டில் நன்மை தரும் புதிய மாற்றங்களைப் பெறுவதற்கான உத்வேக மனநிலையுடன் உங்கள் செயல்களை வடிவமைப்பீர்கள். சாதனை நிகழ்த்தும் வகையில் சந்தர்ப்பங்கள் உருவாகும். பணவரவுகள் முக்கிய தேவைகளின் போது கணிசமாக கைவந்து சேரும். பேசும் வார்த்தையில் நீதியும் நியாயமும் கலந்திருக்கும். ஒவ்வொரு செயலும் பொதுநலத் தன்மையுடன் இருக்கும். குடும்பத்தில் உறவினர்களின் நல் ஆதரவு கிடைக்கும். இளைய சகோதரர்கள் வகையில் சுபச்செலவு வரலாம். சமூக அந்தஸ்தில் உயர்வு பெறுவதற்கான வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். எந்த செயலிலும் தன்னம்பிக்கையும் துணிவும் கலந்திருக்கும். வீடு, வாகன வகையில் அபிவிருத்தி தரும் நற்பலன் கிடைக்கும். கடன்கள், ராகு, கேது, குரு பெயர்ச்சிக்குப் பின் தீரும் மார்க்கமுண்டு. கணவன், மனைவி ஒற்றுமை, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் தன்மையால் மட்டுமே சிறப்பாக இருக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கிறது என்பதற்காக அவர்களை அதிகப்படியாகத் தொந்தரவு தராமல் இருத்தல் நலமாகும். உடல் நல ஆரோக்கியம் பலம்பெற நல்ல நடைமுறைகளைப் பின்பற்றுவதால் நன்மை உண்டு. தந்தைவழி உறவினர்கள் இணக்கமுடன் நடந்துகொண்டாலும் சிறு அளவிலான மனத் தாங்கல்களும் வந்து விலகலாம்.

தொழில், வியாபாரம், உத்தியோகம் போன்றவற்றில் இருக்கும் நிதானமான சூழ்நிலை மாறி வருடத்தின் பிற்பகுதியில் வளம் தரும் நிலை உருவாகும். மூத்த சகோதரர்கள் உங்களுக்குத் தொழில் சார்ந்த வகையில் தன்னால் ஆன உதவிகளைத் தருவார்கள். ஆதாய வருமானங்களைப் பெற கூடுதலாக உழைக்கவேண்டும். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு முயற்சி செய்பவர்கள் நல்ல செய்தி விரைவில் கிடைக்கப் பெறுவார்கள். திருமண வாய்ப்புகள் குருபெயர்ச்சிக்குப் பின் அனுகூல பலனை உருவாக்கித் தரும்.

அரிசி ஆலை, உப்பளத்தொழில், நீர் இறைக்கும் இயந்திரம், கண் கண்ணாடிகள், கண்ணாடிப் பொருள்கள், குளிர்சாதனப் பெட்டி தயாரிப்பு ஆகிய தொழில் சார்ந்தவர்கள் தங்கள் தொழிலில் முன்னேற்றம் பெறுவதற்கான பணிகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவார்கள்.

அரச பணியாளர்கள் தங்கள் பணியில் முன் உள்ள சவால்களை எதிர்கொண்டு திறமையாக வெற்றி பெறுவார்கள். மீன்வளத்துறையில் பணி செய்வோர், மீனவர்களின் நலன் காக்கும் திட்டங்களைக் கவனமுடன் செயற்படுத்தி நற்பெயர் பெறுவார்கள்.

தனியார் பணியாளர்களுக்கு ஏற்றமிகு காலம். குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சூழ்நிலை நிலவும். சமூகத்தில் கௌரவமான நிலை உண்டாகும். மனம் உற்சாகமுடன் செயற்படும். புத்திரர்களைக் கூடுதல் கவனத்துடன் பேணி வளர்ப்பது நல்லது. வீட்டில் மனநிறைவு தரும் பலன்கள் உண்டாகும்.

அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண் கள், தங்கள் பணியில் எதிர்வரும் சிரமங்களை எளிதில் சமாளிக்கும் மனத்திடம் பெறுவார்கள். பணிகளைத் தகுந்த முன்னேற்பாட்டுடன் செயற்படுத்தி மனநிறைவும் நிர்வாகத்திடம் நற்பெயரும் பெறுவார்கள். சக ஊழியர்கள் உதவி செய்யும் மனப்பான்மையுடன் இருந்தாலும் உங்களின் வேண்டுகோளுக்காக காத்திருப்பார்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் பொருளாதார சிக்கனத்தைக் கடைப்பிடித்து சிரமங்கள் அணுகாத நல்வாழ்க்கையை அமைப்பார்கள்.

புத்திரர்கள் விளையாட்டுத்தனமாக நடந்துகொள்வர். அவர்களின் குணங்களைச் சரிசெய்து பொறுப்புகளை உணரச் செய்வீர்கள். சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழில் புரியும் பெண்கள் கூடுதல் கவனம் செலுத்தி தொழில் வளர்ச்சியை உருவாக்குவார்கள். திருமண முயற்சி செய்பவர்களுக்கு வருடப் பிற்பகுதியில் அனுகூலம் தரும் நற்பலன்கள் உருவாகும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

வான்வெளி ஆராய்ச்சி, கடல் வளங்கள் பயன் குறித்த பயிற்சி, கொதிகலன், வாகனங்கள் வடிவமைத்தல், விவசாய படிப்பு, மீன் வளர்ப்பு போன்ற படிப்பு சார்ந்த மாணவர்கள் தங்களது ஒருமுக சிந்தனைத்திறனால் உயர்வு தரும் நிலை பெறுவார்கள். இன்ஜினியரிங், மருத்துவத்துறை மாணவர்கள் கடும் முயற்சி செய்ய வேண்டிவரும். ஆரம்ப, உயர்நிலை மாணவர்களின் நிலையும் இப்படியே. படிப்புக்குத் தேவையான பணவரவு சிரமத்தின் பேரில் கிடைக் கும். சக மாணவர்கள் பேசும் கருத்துப் பரிமாற்றங்களில் ஏற்படும் முரண்பட்ட தன்மைகளைப் பெரிதுபடுத்தாமல் நடந்து கொள்வதால் நன்மை உண்டு. தந்தை, மகன் உறவு நிலை அன்பும், கனிவும் கலந்ததாக இருக்க தகுந்த பொறுப்புடன் நடந்துகொள்வது நலமாகும்.

**பரிகாரம்:** ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை, வடை மாலை சார்த்தி ஸ்ரீராமஜெயம் சொல்லி வழிபடத் துன்பங்கள் விலகி அனுகூல பலன் உருவாகும். (வளரும்)



பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும், இறுவட்டு வெளியீட்டு விழாவும் நேற்றுக் காலை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பங்கேற்ற பிரமுகர்களை முதல் இரு படங்களிலும் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்படு

(படங்கள்: ஒளிஅதிரன், சுதா)

## காரைநகரில் பொங்கல் வேள்வி

காரைநகர் ஆண்டி கேணி ஐயனார் ஆலய வருடாந்த பொங்கல் வேள்வி உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றை தினம் ஐயனாருக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, தொடர்ந்து பொங்கல் வேள்விஎன்பனஇடம் பெறும். (ஒ-73)

**படிவம்**

பட்டதாரி புதிய ஆசிரியர்களை தொழில் திசைமுகப் படுத்தும் செயற்றிட்டத்தின் 3 மாத சேவைக்கால ஆசிரியர் தராதரப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவுத்திகதி 27.04.2006

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் நிதிவிடயங்களுக்கு மீண்டும் முத்திரை

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிதி தொடர்பான விடயங்களுக்குரிய முத்திரைக் கட்டணம் மீண்டும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதனா வைத்தியசாலையில் நடைமுறையில் இருக்கும் வேதனம் மற்றும் செலவினங்கள் போன்ற கொடுப்பனவுகளுக்கு அந்தத் தொகைக் கேற்ப முத்திரை ஒட்டவேண்டுமெனவும் -

கடந்த 04.04.2006 இல் இருந்து இதனை அமுல் படுத்துமாறும் - வைத்தியசாலை நிர்வாகத்தின் கணக்குப் பிரிவு தனது நிதிப் பிரிவுகளுக்கு அறிவித்துள்ளது.

இதற்கமைய முதல் ஆயிரம் ரூபா தொகைக்கு ஒரு ரூபா முத்திரையும் அதன் பின்வரும் ஒவ்வொரு ஆயிரத்துக்குஅல்லது அதன் பகுதி ஒன்றிற்கு ஒரு ரூபா வீதமும் 25 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் வரையான தொகைக்கு 25 ரூபா வீதமும் 40 இலிருந்து 50 ஆயிரத்துக்குட்பட்ட தொகைக்கு 40 ரூபா வீதமும் 50 ஆயிரத் துக்கு அல்லது அதற்கு மேல் 50 ரூபா வீதமும் முத்திரைக் கட்டணம் அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15)

## கணனிகள் அன்பளிப்பு

ஸ்கந்தபுரம்,ஏப்.17

ஆரோக்கியபுரம் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு இரண்டு கணனிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

லண்டனிலுள்ள 'ஐலண்ட் பிரண்ட்ஸ் ருகெதர்' என்ற அமைப்பினூடாக டாக்டர் சிவசிதம்பரம் இமையகாந்தன் என்பவர் இந்தக் கணனிகளை அன்பளிப்புச் செய்துள்ளார். (3-381-202)

**NORTH LANKA இனது**
**இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!!**

**Trinity College and University**

இனது கணனிப் பட்டதாரியாகும் அரிய வாய்ப்பு
O/L தகைமையுடன் இரண்டு வருடங்களில்

**B.Sc. in Computer Science**

- U.K. Department of Education ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- கற்கைநெறியை எமது மண்ணிலேயே பூர்த்திசெய்ய முடியும்.
- அலுவலர்களுக்கான விசேட பிரிவும் ஆரம்பம்.

*சலக Diploma வகுப்புகளும் ஆரம்பம்*

**North Lanka** Main Street, Chankanai. T.P.: 0214591647

(சி-48941)(25-34-49)

## இறுதி அஞ்சலியும் கண்ணீர்க் காணிக்கையும்



எம் நிலையத்தின் போசகரும் கிராம சேவையாளருமாகிய சிவக்கொழுந்து தெட்சணாமூர்த்தி அவர்களின் சகோதரரும் சமூக சேவையாளரும், விளையாட்டு வீரரும், யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவனுமாகிய

**சிவக்கொழுந்து இராசதுரை**

14.04.2006 அன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உள்ளங்கள் அனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதற்கும் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்குகொள்வதற்கும் 17.04.2006 இன்று குப்பிளான் வீரமனையில் இருக்கும் இல்லத்துக்கு பிற்பகல் 3 மணிக்கு வருகைதருமாறு எமது நிலைய உறுப்பினர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

விக்கினேஸ்வராவிளையாட்டுக்கழகம், குப்பிளான். (49551)(25-34-49) விக்கினேஸ்வரா சன சமூக நிலையம், குப்பிளான்.

**வளர்மதி நிறைவாழ்வக முன்பள்ளி ஆசிரியை தேவை**

எமது மேற்படி முன்பள்ளி சிறார்களுக்கு நவீன முன்பள்ளி கற்பித்தல் முறைகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் கற்பிப்பதற்கு தகுதி வாய்ந்த முன்பள்ளி ஆசிரியை தேவை. ஆங்கில அறிவு உட்பட போதிய கல்வித் தகைமை வேண்டும். தகைமைக்கேற்ப சிறந்த சம்பளம் வழங்கப்படும்.

தகுதியானோர் 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சான்றிதழ்களுடன் கீழ்க் காணும் முகவரியில் அமைந்துள்ள முன்பள்ளிக்கு நேரில் சமுகம் தரவும்.

செயலாளர், வளர்மதி நிறை வாழ்வகம். (சி-46562)(25-34-49) *சம்பியன் லேன், கொக்குவில்.*

**ராஜா யாழ்ப்பாணம்**
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
**அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது**
10.30,2.30,6.30,9.30, ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ் சுன்னாகம்**
புதுவருட வெளியீடாக ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
**டிஷ்யும்**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
**கள்வனின் காதலி**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசு மீனாட்சி



புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு மீனாட்சி அவர்கள் நேற்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும் கந்தசாமி, காலஞ்சென்றவர்களான பொன்னாச்சி, சிவகாமி அகியோரின் அன்புச் சகோதரியும் காராளசிங்கம், கமலாம்பிகை, சீராளகந்தபாலன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நாகநாதன் (U.K), தனலக்சுமி (ஆசிரியர், யா/தம்பசிட்டி அ.மி.த.க.பாடசாலை), சிதம்பரநாதன் (அமரர்), யோகநாதன் (U.S.A) ஆகியோரின் அன்புத் தாயும் மகேஸ்வரி, சுப்பிரமணியம், சாந்தநாயகி, லோகேஸ்வரி, செல்வராஜா, சுகந்தி (U.S.A) ஆகியோரின் பாசமிகு மாமியும் பகீரதி, பாரதி, பிரதீபா, சங்கீதா, சாரங்கன், சயந்தன், தர்ஷிகா, கோபிகா, விஷ்ணுபிரியா, விஷ்ணுமீரா, அபயபிரதாபன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உல்லைக்கலட்டி, புலோலி மேற்கு, புலோலியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (17.04.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49549) (25-34-49)

*உல்லைக்கலட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.*

தகவல்: மு.சீராளகந்தபாலன் (மகன் - ஆசிரியர்).

### சுப்பிரமணியம் ஆண்டிஐயா

தட்டாம்புலம், வலந்தலை காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆண்டிஐயா அவர்கள் நேற்று (16.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2006) திங்கட்கிழமை திருகோணமலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருகோணமலை.* (49554) (25-34-49)

தகவல்: குடும்பத்தினர்.

# தேவை



**பக்க வடிவமைப்பாளர் மற்றும் கணணி தட்டெழுத்தாளர்**

*Page Maker
*Photo Shop
*Corel Draw

ஆகிய மென்பொருட்களைக் கையாளுவதில் திறமையும் Page Maker இல் பக்க வடிவமைப்புச் செய்யும் திறன் அல்லது ரைப் செய்யும் திறன் உள்ளவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு

- இரவிலும் பணியாற்றத் தயாராக இருப்பது மேலதிக தகைமையெனக் கருதப்படும்.
- செயற்திறன் உள்ளவர்களுக்கு முன்னுரிமையுடன் கவர்ச்சிகரமான சம்பளம்.
- கணணித் தட்டெழுத்தாளராகவும் பக்க வடிவமைப்பாளராகவும் பயிற்சி பெற விரும்புபவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
- கணினி பற்றிய அடிப்படை அறிவு மட்டுமே போதுமானது.




19-04-2006 புதன் கிழமை காலை 10 மணிக்கு

**நேரில் வரவும்**

உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

## தொல்புரத்தில் காணி இடாப்பு தயாரிப்புப் பணி

வலி.தென்மேற்கு,ஏப்.17

தொல்புரம் கமலச்சேவை நிலையம் நெற்காணி இடாப்பு தயாரிக்கும் நடவடிக்கையை இப்பிரிவிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்களுக்கு ஊடாக மேற்கொண்டு வருகின்றது. நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தத்தமது பகுதி விவசாய சம்மேளனத்துடன் தொடர்புகொண்டு இதற்கான படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்களின் நிழற்பிரதியுடன் ஒப்படைக்க வேண்டும் என்று கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார். பெரும்போக நெற்செய்கைக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்கும்போது இந்த நெற்காணி இடாப்புப் பதிவின் பிரகாரம் உரம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-135)(22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலை மீளத் தொடங்கியதற்கு விடுதலைப் புலிகள் மன்னிக்கவேண்டும்!

## வவுனியா மக்கள் படை அறிக்கை

படையினர இலக்குவைத்துத் தாம் தாக்குதல்களை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்றும் -

இதற்காக விடுதலைப் புலிகள் தம்மை மன்னிக்க வேண்டும் என்றும் -

வவுனியா மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை தெரிவித்துள்ளதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. மக்கள் படை இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையையும் இணையத்தளம் பிரசுரித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இனவெறி ஆக்கிரமிப்புப் படைகளே! வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலங்களாக எமது மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டு வந்துள்ளனர். ஒட்டுப்படைகளும் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இந்தக் கோழைத்தனமான தாக்குதல்களைச் செய்தமை வெளிப்படையான உண்மையாகும். அத்துடன், திருமலை, யாழ்.குடா நாட்டுப் பகுதியில் எமது தமிழ் உறவுகள் பலர் இனவாதக் காடையர்களாலும், ஸ்ரீலங்கா இராணுவத்தாலும் படுகொலை செய்யப்பட்ட இந்த வேளையில் நாம் புலிகளுக்கும், இலங்கை அரசிற்குமான ஜெனீவா போர் நிறுத்த உடன்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற் காக எமது தாக்குதல்களை நிறுத்திக்கொண்டோம். ஆனால், இலங்கை அரசு இதை மதிக்கவில்லை. இதற்கு மாறாக மீண்டும் தமிழ் மக்களைப் படுகொலைசெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் நாம் மீண்டும் பொறுமையாக இருக்க முடியாது.

எனவே, அடுத்தகட்டத் தாக்குதலாக வவுனியா உயர்பாதுகாப்புப் பிரதேசம் எனப்படும் ஜோசப் இராணுவமுகாமிற்கு முன்பாக கிளைமோர் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியிருந்தோம். இதில் 7 படையினர் கொல்லப்பட்டு மேலும் 10 படையினர் படுகாயமடைந்தனர். இதில் ஓர் அதிகாரியும் அடங்குவார். இப்படியான தாக்குதல்கள் எதிரி எம் மண்ணைவிட்டு விலகும்வரை நடத்தப்படும் என்பது உறுதி. நாம் இத்தாக்குதல் செய்யத் தொடங்கியதை விடுதலைப் புலிகள் மன்னித்துக் கொள்ளவேண்டும். எமது அப்பாவி மக்களைக் காப்பாற்ற எமது வழி இதுவே. இனிவரும் காலத்தில் மிகவும் கடுமையான அழிவுகளை இலங்கை முப்படையினருக்கும், ஒட்டுக்குழுக்களுக்கும் ஏற்படுத்தி இவர்களை எம் மண்ணில் இருந்து அப்புறப்படுத்தும்வரை நாம் ஓயமாட்டோம் என்றுள்ளது.

## ஆசி! அமைதி முயற்சிக்கா? போர் முரசுக்கா?



பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரான கோட்டபாய ராஜபக்ஷ, தமது மூத்த சகோதரரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவிடம் புதுவருட ஆசி பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலுக்கு ஆக்கிரமிப்புப் படைகளின் தலைகள் உருளும். இனிவரும் காலங்களில் நாம் பல்வேறு வியூகங்களில் தாக்குதல்களை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே, அன்பான எமது உறவுகளே இதற்குப் பூரணமாக ஒத்துழையுங்கள். பாதுகாப்பான இடம் நோக்கி நகருங்கள். பெறுமதியான உங்கள் உயிர்கள் பாதுகாக்கப்படும் - என்றுள்ளது.

## புழுங்குகின்றார் அமைச்சர் மஜீத்!

திருகோணமலையில் கடந்த வாரம் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் அரசாங்கத் தரப்பு நடந்து கொள்ளும் செயற்பாடு தொடர்பில் கூட்டுறவுத்துறை அமைச்சர் நஜீப் ஏ. மஜீத் அதிருப்தியடைந்திருக்கிறார் எனத் தெரியவருகிறது. திருகோணமலையில் நாடாளு மன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள அமைச்சர் நஜீப் ஏ. மஜீத், திருமலை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார். என்றாலும், திருமலையில் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் அங்கு முன்னெடுக்கப்படும் அரச நடவடிக்கைகளில் அமைச்சர் மஜீத் தாம் ஓரங்கட்டப்பட்டுள்ளார் எனக் கருது கின்றாரெனத் தெரிகிறது.

கலவரத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு வழங்குவது குறித்து ஆராயவும் அரசுத் தலைமையினால் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டிருந்தார். இரண்டு தடவை இந்த அமைச்சர் திருமலை சென்று திரும்பிய போதிலும் இந்த அமைச்சரின் வருகை பற்றியோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான கலந்துரையாடல் குறித்தோ மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரான அமைச்சரான நஜீப் ஏ.மஜீத்திற்கு அறிவிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரான தாம் இவ்வாறு புறக்கணிக்கப் படுகின்றமை குறித்து அமைச்சர் நஜிப் ஏ. மஜீத், ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு ஒன்றையும் செய்யவிருக்கிறார் எனத் தெரிகிறது.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக நேற்றுக்காலை மன்னார் நகரில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்தத் தேடுதலின்போது வாகனங்களை நிறுத்தி நுணுக்கமாக சோதனையிட்ட பொலீஸார், வீதியோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள்களையும் பொலீஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

இதனையடுத்தே நேற்றுமாலை 6 மணிக்கு அவசர அவசரமாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கு தளர்த்த ஏற்பாடாகியிருந்தது. ஆனால் நேற்றிரவு 8 மணிக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது.

வவுனியாவில் இடம்பெற்ற சில சம்பவங்களையடுத்து மன்னாரில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பாதுகாப்புக் கருதி ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மன்னார் பொலீஸார் நேற்றிரவு தெரிவித்தனர். (க)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமையில் ஈடுபடுகின்றனர்.

நகரின் முக்கிய சந்திகள் மற்றும் படைமுகாம்களுக்கு முன்பாக நின்று வீதிச் சோதனையில் ஈடுபடும் படையினர் சந்தேகத்திற்கு இடமான இடங்களிலும் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். திடீர் திடீர் என முளைக்கும் வீதிச் சோதனை நிலைகளில், வீதியால் செல்லும் அனைவரும் நிறுத்தப்பட்டு இறக்கிச் சோதனையி டப்படுகின்றனர். நேற்றுமுன்தினம் இரவு முதல் இந்த நடவடிக்கைகள் தீவிரமடைந் துள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (க-7)

## விடுதலைப் புலிகள் முன் உள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஏற்பட்டுள்ள நிலைமைகளை விளக்குவதற்காகவும் இக்கடிதத்தினை எழுதுகின்றேன். எமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகளின் பயண ஒழுங்கை வழமைபோன்று ஏற்படுத்தித்தரும்படி உங்களிடமும் கண்காணிப்புக்குழுவிடமும் கோரியிருந்தோம். முதற்கட்ட ஜெனீவாப் பேச்சு முடிவடைந்து வந்து ஒரு குறுகிய காலப்பகுதியிலேயே உங்களுடன் இக்கோரிக்கையை நாம் முன்வைத்திருந்தோம். எமது தளபதிகளுடைய பயண ஒழுங்கிற்கு திகதிகள் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அரசு வான் வழிப் போக்குவரத்தை நிராகரித்துள்ளதென கண்காணிப்புக்குழு எமக்கு அறிவித்திருந்தது. ஏற்கனவே நடைமுறையில் இருந்த வழிகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது எமது தலைமைப்பீடத்திற்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்தது. இந்நிலையில் அடுத்த கட்ட ஜெனீவாப் பேச்சுக்கான தீர்மானங்கள் எடுக்கவேண்டிய அவசரம் கருதியும் இதற்காக எமது தளபதிகளின் பயணம் நடைபெறவேண்டியிருந்த அவசியம் கருதியும் ஏற்கனவே நடைமுறையில் இருந்த கடல் வழிப் பயண ஒழுங்குபற்றிக் கண்காணிப்புக்குழுவிற்கு நாம் பரிந்துரைத்தோம். இந்த நடைமுறைக்கும் தனது தடையை கண்காணிப்புக்குழுவின் ஊடாக அறிவித்ததோடு, எமது தளபதிகள் இலங்கை கடற்படையால் ஒழுங்குபடுத்தப்படும் படகிலேயே செல்லலாம் என்றும் இலங்கை அரசு நிர்ப்பந்தித்தது.

இலங்கை அரசாங்கம் அனைத்துக் கட்சி மாநாடுகளை ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்கு முன் நடத்திய அதேநேரத்தில் எமது மத்திய குழு கூடுவதற்குக்கூட பல தடைகளை விதித்துள்ளது. இவற்றினுள் முதன்மையாக எமது தளபதிகளினது பயணங்களையும் செயற்பாடுகளையும் இலங்கை அரசாங்கமானது முடக்கியுள்ளதுடன், போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மதித்துச் செயற்படவில்லை. இந்தச் சூழ்நிலையானது எமது விடுதலை இயக்கம் குழப்பங்கள் நிறைந்த சூழமைவை உருவாக்கவல்ல பல வரையறைகளுக்குள் செயற்படுவதற்கு நிர்ப்பந்தித்துள்ளது. இலங்கை அரசின் இச் செயற்பாட்டை ஜெனீவாப் பேச்சுக்கு விடுதலைப் புலிகளைச் செல்லவிடாது தடுக்கும் ஒரு நிலைப்பாடாகவே நாம் விளங்கிக்கொள்கின்றோம். இக்கட்டத்திலேயே கண்காணிப்புக்குழுத் தலைவர் எம்மைச் சந்தித்து தான் ஒரு மாற்றுயோசனையை முன்வைப்பதாகவும் அதனை இந்தத் தடவை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். அவர் தான் ஒரு தனியார் படகை ஒழுங்குபடுத்துவதாகவும் அதில் அவர் உட்பட கண்காணிப் புக்குழுவினரும் எமது தளபதிகளோடு பிரயாணிப்பதாகவும் இலங்கை கடற்படையின் சம்பந்தமோ தலையீடோ இருக்காது எனவும் உறுதியளித்தார். ஜெனீவாப் பேச்சுகளில் முக்கியத்துவம் கருதி இதனை ஒரு தற்காலிக ஏற்பாடக எமது தலைமைப் பீடம் ஏற்றுக்கொண்டது. கண்காணிப்புக் குழுத் தலைவரின் வாக்குறுதிகளை முழுமையாக நம்பியே எமது தளபதிகளின் பயண ஒழுங்கை மேற்கொண்டோம். துரதிர்ஷ்ட வசமாக எமது தளபதிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக கடற்படையினர் நடந்துகொண்டமையாலும் கண்காணிப் புக்குழுத் தலைவரின் வாக்குறுதிகளுக்கு எதிர் மறையாக சம்பவங்கள் நடைபெற்றமையாலும் எமது தலைமைப்பீடத்தின் மத்திய குழுக் கூட்டம் நடைபெறமுடியாமற் போய்விட்டது. இக்கூட்டத்தில் எமது கிழக்குத் தளபதிகளைச் சந்தித்து உறுதியான முடிவுகள் எடுக்காமல் நாம் ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளமுடியாது என்பதை உங்களுக்கு முன்பே விளக்கியிருந்தோம். இலங்கை அரசு எமது தளபதிகளின் பயணத்தை குழப்பியதை நாம் கண்டிப்பதோடு இந்நிலைக்கு எமது வருத்தத்தையும் தெரிவிக்கின்றோம்.

எமது வான்வழிப் பயணத்தையும் நிராகரித்து கண்காணிப்புக்குழு ஒழுங்கமைத்த கடற்பயணத்தையும் அரசு குழப்பியதால் நாம் ஜெனீவாவிற்கு வரமுடியாத ஒரு இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையிட்டு நாம் மிகவும் கவலைகொண்டுள்ளோம். அதனால் எம்முன் போடப்பட்டிருக்கும் ஜெனீவாப் பேச்சுக்கு வருவதற்கான தடைகள் நீக்கப்பட்டு சுமுகமான சூழல் உண்டாகும்வரை எம்முடைய குழு ஜெனீவாப் பேச்சுக்குவர முடியாது என்பதை கவலையுடன் அறியத்தருகின்றோம். எதிர்கால முன்னெடுப்பிற்கு யுத்த நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்தவும் குறிப்பாக, ஜெனீவாப் பேச்சுகளில் உடன்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவும் இதுவரை காலமும் பேணப்பட்டுவந்த நடைமுறைகளை மாற்றியமைக்க அனுமதிக்காமலும் இலங்கை அரசை வலியுறுத்தி வழிக்குக்கொண்டுவருவது அவசியமானது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். இவற்றின் ஊடாகத்தான் வருங்காலப் பேச்சுகளுக்கு உகந்த ஒரு சூழலை உருவாக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பேச்சுக்கான புறச்சூழலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெடுபிடிகளால் தடைப்பட்டுப் போனதாயும் புலிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் -

கிழக்குத் தளபதிகள் வன்னிக்கு வந்து, அவர்களுடன் தமது தலைமை விரிவாகப் பரிசீலனை செய்யாமல் -

அமைதிப் பேச்சு நடத்துவதற்கான சினேகபூர்வ புறச்சூழல் ஒன்றை களத்தில் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வராத நிலையில் -

அடுத்த சுற்றுப் பேச்சு சாத்தியமே இல்லை என்பதைப் பகிரங்கமாக விடுதலைப் புலிகளின் தலைமை விரைவில் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாவது தடவை திகதி நிர்ணயிக்கப்பட்டபடி எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் நடத்த உத்தேசிக்கப்பட்ட பேச்சுகளில் தாங்கள் பங்குபற்ற முடியாதிருப்பதற்கான காரணங்களையும், விவரங்களையும் தெளிவுபடுத்தவேண்டிய ஒரு நிலைமை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதேசமயம் -

அமைதிப் பேச்சுகளிலிருந்து புலிகள் முற்றாக விலகிக் கொண்டார்கள் என சில ஊடகங்களில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் பரபரப்பாக வெளியிடப்பட்ட செய்திகள் தொடர்பான குழப்பத்தை நீக்கி தமது உண்மை நிலைப்பாட்டைப் புலிகள் தெளிவுபடுத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில் -

இலங்கை அமைதி முயற்சிகள் இக்கட்டில் சிக்கித் தடைப்பட்டிருப்பதால் விசனமடைந்திருக்கும் அனுசரணைத் தரப்பான நோர்வே, இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் தற்போதைய நிலைமைக்கான பின்னணிகள் குறித்து கண்காணிப்புக் குழுவின் விரிவான அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

''இலங்கை அமைதி முயற்சிகளைத் தொடர்ந்து முன்நகர்த்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளின் ஆலோசனைகளை நோர்வே பெற்றுக்கொள்ளும்.'' - என்று நோர்வே அனுசரணைக்குப் பொறுப்பான அந்த நாட்டின் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

''சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமாகிய விடுதலைப் புலிகளாலும், இலங்கை அரசாலும் மட்டுமே அங்கு பாதுகாப்பு நிலைமைகளை உறுதிப்படுத்த முடியும். அத்தோடு ஜெனீவாப் பேச்சுகளையும் பாதுகாக்க முடியும்.'' - எனவும் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக் காட்டியுள்ளார். (க)

யாழ்.-கொழும்புக்கான சொகுசு பஸ் சேவை
தொலைபேசி மூலமாகவும் உங்கள் ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளலாம்.
T.P. 222 8139
தொடர்புகளுக்கு:
சன் நெற்
பருத்தித்துறை வீதி,
இருபாலை சந்தி,
இருபாலை.

யுனிவோசல்
LOGIC
கருத்தரங்கு
நாளை: 18.04.2006 வியாழன் செவ்வாய் 8 a.m.
ஆசிரியர்
P.கமல்

COLLEGE OF CHEMISTRY
ORGANIC
ஆரம்பம்: 18.04.2006
2008 A/L
விரைவில் ஆரம்பம்
By: DIAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,
2006 மே

வெளியீடு 02

# மாதிரி வினாப்பத்திரம்

## கணக்கீடு - I

திரு. S.கொலின். B.B.A.-திருகோணமலை.

பகுதி -I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. சூழல் காரணிகளின் மாற்றத்திற்கேற்ப கணக்கீட்டு முறைகளும் மாற்றம் செய்யப்படல் வேண்டும். இங்கு சூழல் காரணிகள் மட்டும் உள்ள பகுதி.
   1) நன்மதிப்பு, தொழில்நுட்பம், அரசகொள்கைகள்.
   2) நன்மதிப்பு, ஆக்கவுரிமை, வியாபாரக் குறி.
   3) சமூக பழக்கவழக்கங்கள், தொழில்நுட்பம், அரசாங்க சட்டவிதிகள்.
   4) தொழில்நுட்பம், பொருளாதாரவளர்ச்சி, நன்மதிப்பு.
   5) மேற்கூறிய எவையும் அல்ல.
2. கணக்குகளின் வகைகள் எவை?
   1) செலவுக் கணக்கு / வருமானக் கணக்கு
   2) வரவுக் கணக்கு / செலவுக் கணக்கு
   3) ஆள்சார் கணக்கு / ஆள்சாராக் கணக்கு
   4) சொத்துக் கணக்கு / பொறுப்புக் கணக்கு
   5) நபர் கணக்கு / மூலதனக் கணக்கு
3. பெறுமானத்தேய்வு செய்வதற்கான கணக்குப் பதிவு யாது?
   1) பெறுமானத்தேய்வுக் கணக்கு வரவு / தேய்மான ஏற்பாட்டுக் கணக்கு செலவு.
   2) பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு வரவு / பெறுமானத்தேய்வுக் கணக்கு செலவு
   3) பெறுமானத்தேய்வுக் கணக்கு வரவு / காசுக் கணக்கு செலவு.
   4) பெறுமானத்தேய்வுக் கணக்கு வரவு / சொத்துக் கணக்கு செலவு.
   5) இலாபநட்டக் கணக்கு வரவு / தேய்மான ஏற்பாட்டுக் கணக்கு செலவு.
4. ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்படுவதற்கான எண்ணக்கருச்சோடி யாது?
   1) ஒப்பீட்டு / முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
   2) தேறிய / பாதுகாப்பு எண்ணக்கரு
   3) தேறிய / இணைத்தல் எண்ணக்கரு
   4) பாதுகாப்பு / அட்டுறு எண்ணக்கரு
   5) நட்ட / பொறுப்பு எண்ணக்கரு
5. A,B இலாப நட்டங்களை 3:2 எனப்பகிரும் பங்காளர்கள். C என்பவர் 1/6 பங்குரித்துடன் அனுமதிக்கப்பட்டார். A,B,C யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்.
   1) 3 : 2 : 1  2) 5 : 3 : 2  3) 3 : 2 : 2  4) 18 : 10 : 5  5) 9 : 6 : 5
6. வினா - 5 இல் விட்டுக்கொடுத்தல் விகிதம் யாது?
   1) 3 : 2 : 1  2) 4 : 3  3) சமன்  4) 5 : 3 : 2  5) 3 : 2
7. வினா- 5 இல் C யினது பங்கு A,B என்போரால் முறையே 2:1 என இழக்கப்படுகின்றது என எடுத்துக் கொண்டு, A,B,C யில் இலாபநட்ட விகிதத்தைக் காண்க.
   1) 10 : 5 : 15  2) 2 : 1 : 3  3) 44 : 31 : 15  4) 22 : 15 : 7
   5) மேற்கூறிய எவையும் அல்ல
8. அருவச் சொத்துக்களை மட்டும் கொண்டுள்ள பகுதி எது?
   1) நன்மதிப்பு, பங்குகழிவு, தொடக்கசெலவு, பதிப்புரிமை
   2) வியாபாரக்குறி, நன்மதிப்பு, பதிப்புரிமை, ஆக்கவுரிமை
   3) தொடக்கசெலவு, வியாபாரக்குறி, பங்குகழிவு, பதிப்புரிமை
   4) வியாபாரக்குறி, பண்டக்குறி, தொகுதிகடன்கழிவு, நன்மதிப்பு
   5) சரியான தொகுதி இடம்பெறவில்லை.
9. மூல ஆவணத்தையும், அதனுடன் தொடர்புடைய மூல ஏட்டையும் கொண்டிராத பகுதி எது?
   (1) செலவுத்தாள் - உட்திருப்பம்.
   (2) கொள்வனவு பற்றுச்சீட்டு – காசேடு.
   (3) பட்டியல் - கொள்வனவு நாளேடு.
   (4) வங்கிக்கூற்று – காசேடு.
   (5) மேற்கூறிய எதுவும் அல்ல.
10. பிழையான கணக்கீட்டுச் சமன்பாடு யாது?
   (1). மூலதனம் = சொத்துக்கள் - பொறுப்புகள்
   (2). மூலதனம் = (நிலையானசொத்து+ நடைமுறைச் சொத்து) – (நீண்டகாலக்கடன் - குறுங்காலக்கடன்)
   (3). தேறிய இலாபம் = (இறுதி மூலதனம்+பற்று) – (ஆரம்ப +மேலதிக மூலதனம்)
   (4). சொத்துகள் = மூலதனம் - பொறுப்புகள்
   (5). சொத்துகள் = மூலதனம் + வெளியக பொறுப்புகள்
11. விற்பனை விலையில் 25% இலாபம் சேர்த்து ரூ.30,000.00 கொள்விலையான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டபோது 10% வியாபாரக் கழிவு வழங்கப்பட்டது. பின்னர் பணத்தை வசூலிக்கும்போது 5% கழிவு வழங்கப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கொடுத்த கழிவுக் கணக்கிலுள்ள மீதி?
   1. ரூ.4,000.00  2. ரூ.5,800.00  3. ரூ.3,750.00  4. ரூ.1,800.00  5. ரூ.1,688.00
12. ரூ.150,000.00 பணத்தை மூலதனமாக உள்ளீடு செய்து ஒரு தனிவியாபாரத்தை ஆரம்பித்தார், மாதாந்தம் ரூ.2,000.00 காசையும் ரூ.1,500.00 கொள்விலையான சரக்கையும் பற்றிக்கொள்வது வழக்கம். வருட முடிவில் காணப்பட்ட தேறிய மூலதனம் ரூ.214,500.00 ஆகக் காணப்பட்டது. வருடத்திற்குரிய தேறிய இலாப நட்டத்தைக் கணிப்பீடு செய்க.
   1. இலாபம் ரூ. 34,500.00  2. நட்டம் ரூ. 34,500.00
   3. இலாபம் ரூ. 94,500.00  4. நட்டம் ரூ. 28,500.00
   5. மேற்கூறிய எதுவுமில்லை
13. பரீட்சை மீதியில் வெளிகாட்டாத வழுக்களை மட்டும் கொண்ட பகுதி யாது?
   1) விடுபட்டவழு, மீதி கீழ் இறக்கும் வழு, செய்யப்பட்ட வழு.
   2) இழைக்கப்பட்டவழு, விடுபட்டவழு, கோட்பாட்டுவழு.
   3) இரட்டிப்புவழு, ஈடுசெய்வழு, மீதி கீழ் இறக்கும் வழு.
   4) தொடக்கவழு, மூடும்வழு, விடுபட்டவழு.
   5) மேற்கூறிய எதுவும் அல்ல.
14. சொத்தொன்றின் கிரயம் ரூ.127,500.00 விற்பனை செய்யப்பட விலை ரூ.67,600.00 சொத்து விற்பனை நட்டம் ரூ. 14,600.00 சொத்தின் திரண்ட தேய்மானம் எவ்வளவு?
   1. 74,500  2. 35,000  3. 180,500  4. 61,000  5. 53,000
15. குமரன் திருப்பிய 1000 பொருள்கள் ஏடுகளில் குமரனுக்கு திருப்பப்பட்டது எனப் பதியப்பட்டது. இத்தவறு திருத்தப்படுவதற்கு

| | | |
|---|---|---|
| 1. உட்திரும்பல் கணக்கு வரவு | 1000 | |
| வெளித்திரும்பல் கணக்கு வரவு | 1000 | |
| தொங்கல் கணக்கு செலவு | | 2000 |
| 2. உட்திரும்பல் கணக்கு வரவு | 1000 | |
| வெளித்திரும்பல் கணக்கு வரவு | 1000 | |
| குமரன் கணக்கு செலவு | | 2000 |
| 3. தொங்கல் கணக்கு வரவு | 2000 | |
| உட்திரும்பல் கணக்கு செலவு | | 1000 |
| வெளித்திரும்பல் கணக்கு செலவு | | 1000 |
| 4. குமரன் கணக்கு வரவு | 2000 | |
| உட்திரும்பல் கணக்கு செலவு | | 1000 |
| வெளித்திரும்பல் கணக்கு செலவு | | 1000 |
| 5. உட்திரும்பல் கணக்கு வரவு | 4000 | |
| தொங்கல் கணக்கு செலவு | | 40000 |

16. காசேட்டின்படி வங்கி மீதி 37,450/- வங்கி அறவீடுகள் 1000/-. மாற்றப்படாத காசோலை 21,000/- வங்கி வசூலித்த வட்டி 4000/- வங்கி கூற்றுப்படி வங்கிமீதி 29,450/- வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமானம் யாது?
   1. 32,000  2. 13,600  3. 8,000  4. 17,400  5. 5,600
17. 01/01/2002 இல் ரூ. 250,000 விற்கு ஒரு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் இழிவுப் பெறுமானம் 10,000/- பாவனைக் காலம் 8 வருடங்கள், நேர்கோட்டு முறையில் தேய்வு செய்யப்பட்டது. 01/01/2005 இல் சொத்து 60,000 செலவில் திருத்தம் செய்யப்பட்டது. இதனால் இதன் பாவனைக் காலம் இன்னும் 5 வருடங்களால் அதிகரித்தது. 2002 ஆம் ஆண்டு பெறுமானத் தேய்வுத் தொகை யாது?
   1. 31,250  2. 25,000  3. 10,000  4. 50,000  5. 30.000
18. வினா 17 இல் 01/01/2005 இல் சொத்தின் தேய்வு மதிப்பு யாது?
   1. 150,000  2. 250,000  3. 240,000  4. 210,000  5. 180,000
19. வினா 17 இல் 2005 ஆம் ஆண்டு பெறுமானத் தேய்வு யாது?
   1. 40,000  2. 21,000  3. 20,000  4. 30,000  5. 42,000
20. பெறுமானத் தேய்வு என்பது.
   (1) சொத்தொன்றின் கொள்விலையிலிருந்து அல்லது மதிப்பிடப்பட்ட விலையிலிருந்து இழிவுப் பெறுமானத்தைக் கழிக்க வருவது.
   (2) நிலையான சொத்துக்களின் விலை குறைவு.
   (3) சொத்தொன்றின் கொள்விலையினது இழிவுப்பெறுமானத்தைக் கழித்து வரும் பெறுமானத்தை பாவனைக் காலம் முழுவதும் பகிர்தல்.
   (4) நிலையான சொத்தொன்றின் பெறுமான அருகல்
   (5) பெறுமானத் தேய்விடக் கூடிய தொகை
21. வங்கிக் கூற்றுப்படி வங்கி வரவுமீதி 64,000 காசேட்டின்படி செலவுமீதி 57,000 வங்கி அறவீடுகள் 4,000 வங்கி செலவு எழுதிய வட்டி 6,000 மாற்றப்படாத காசோலைகள் 26,000 எனின் வங்கிக் கூற்றில் செலவு எழுதப்படாத காசோலைகளின் பெறுமானம் யாது?
   1. 48,000  2. 28,000  3. 70,000  4. 75,000  5. 35,000
22. வினா இலக்கம் 21 இல் திருத்திய காசேட்டின்படி வங்கி மீதி யாது?
   1. செலவு மீதி 55,000  2. வரவு மீதி 55,000
   3. செலவு மீதி 62,000  4. வரவு மீதி 62,000
   5. வர்வு மீதி 36,000
23. பெறவேண்டிய சந்தாக் கணக்கு ஒரு
   1. சொத்துக் கணக்கு  2. பொறுப்புக் கணக்கு
   3. செலவுக் கணக்கு  4. வருமானக் கணக்கு
   5. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
24. ஆண்டு 05/06 இல் பெறப்பட்ட சந்தாப் பெறுவனவு 67,000/- இதில் ஆண்டு 04/05 இற்குரிய 4,600/- சாந்தாவும் ஆண்டு 06/07 இற்குரிய 7,000/- சந்தாவும் ஆண்டு 05/06 இல் பெறப்பட்டது. ஆண்டு 05/06 இற்குரிய சந்தா 5,000/- 04/05 இல் பெறப்பட்டது. 05/06 இற்குரிய 6,300/- சந்தா இன்னும் பெறப்படவில்லை. ஆண்டு 05/06 இற்குரிய சந்தா யாது?
   1. 67,300  2. 66,700  3. 63,300  4. 67,000  5. 70,700
25. வினா 24 இல் அட்டுறு எண்ணக்கரு பின்பற்றப்படவில்லையென எடுத்துக் கொண்டால் ஆண்டு 05/06 இற்குரிய சாந்தா யாது?
   1. 66,700  2. 67,300  3. 68,700  4. 69,000  5. 65,000
26. 01/01/06 இல் இருப்பு 74,000/- 31/03/06 இல் முடிவடைந்த காலாண்டு காலத்திற்கான கொள்வனவுகள் 394,000/- ஆகவும் விற்பனைகள் 480,000/- ஆகவும், பொருள்பற்று 6,000/- ஆகவும் காணப்படுவதுடன் நிறுவனம் விற்பனை விலையில் 20% இலாபம் சேர்த்து விற்பனை செய்வது வழக்கம். 31/03/2006 இல் ஏற்பட்ட தீ விபத்தில் 48,000/- கொள்விலையான பொருள்கள் காப்பாற்றப் பட்டது என எடுத்துக்கொண்டு தீயால் அழிந்த நட்டத்தைக் காண்க.
   1. 34,000  2. 24,000  3. 36,000  4. 20,000  5. 60,000

27 – 30 வரையுள்ள கூற்றுகள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக.

27. வாகனத்திற்கு குளிரூட்டி பொருத்துதல் ஒரு வருமான செலவு ஆகும். ( )
28. முடிவுற்ற பொருளகளின் மதிப்பீட்டிற்கு மூலக்கிரயத்தில் மதிப்பிடுவதைக் காட்டிலும் உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடுவது சிறந்தது அல்ல. ( )
29. பேரேடுகள் 'பொதுப்பேரேடு' துணைப்பேரேடு என வகைப்படுத்தப்படும் ( )
30. வெளித்திரும்பல் நாளேட்டுப்பதிவுக்கான மூல ஆவணம் வரவுத்தாள் ஆகும். ( )

31 - 38 வரையான வினாக்களுக்குச் சுருக்கமாகவும் திட்டவட்டமாகவும் விடை தருக.

31. கணக்கீட்டுக் கொள்கைகள் எண்ணக்கருக்கள் என்பது யாது?
32. கட்டுப்பாட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதன் நன்மைகள் 2 தருக?
33. உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பதன் நோக்கம் யாது?
34. பாதுகாப்பு எண்ணக்கரு என்பது யாது?
35. நன்மதிப்பு மதிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
36. 'காணர் எதிர் மறே' என்ற தீர்ப்பு குறிப்பிடுவது யாது?
37. ஆயுள் கால அங்கத்தவர் சாந்தா என்பது யாது?
38. பிற்போடப்பட்ட வருமான செலவு என்பது யாது?
39. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொழில்கொள்வோர், தொழிலாளர் முறையே ………… என்ற விகிதத்தில் பங்களிப்பு செய்வார்.
40. இறுதியிருப்பிற்கும் இலாபத்திற்கும் …………………… கணியத் தொடர்பு காணப்படும்.

(கணக்கீடு - I இல் பகுதி II இன் வினாக்கள் 24.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விடைக் குறிப்புகள்

# கணக்கீடு -II

வெளியீடு 01

திரு. D.SAM - யாழ்ப்பாணம்.

## பகுதி II

வினா இல : 1

(அ) (i)

- ❖ இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம்.
- ❖ இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை மேற்பார்வை செய்யும் சபை.

(ii) ஒரு தொழில் முயற்ச்சியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலிலும், சமர்ப்பித்தலிலும் பின்பற்றப்படும் கோட்பாடுகள், அடிப்படைகள், மரபுமுறைகள், விதிகள், நடைமுறைகள்.
உதாரணம் : பெறுமானத் தேய்வுக் கொள்கை.

(iii)
- ❖ ஐந்தொகை
- ❖ வருமானக் கூற்று
- ❖ உரிமை அசைவுக் கூற்று
- ❖ காசுப் பாய்ச்சல் கூற்று
- ❖ கணக்கீட்டுக் கொள்கைகளும், விளக்கக் குறிப்புகளும்.
- ❖ கம்பனிகளின் அரசு

(iv) - அடிப்படைப் பிழைகள் :
கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிதியறிக்கைகள் தொடர்பாக நடப்பாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட வழுக்கள்.
- ஐந்தொகைக்குப் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள்
ஐந்தொகைத் திகதிக்கும் நிதிக் கூற்றுக்கள் வெளியிட அதிகாரம் அளிக்கப்பட்ட திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெறும் சாதக, பாதக நிகழ்சிகள்.

(ஆ) (1)

வரையறுக்கப்பட்ட சம்பத் கம்பனியின்
31.03.2006 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
இலாப நட்டக் கணக்கு

| | குறிப்பு | தொகை (ரூபா) `000 |
|---|---|---|
| விற்பனைப் புரள்வு | (1) | 14 262 |
| விற்றசரக்கின் கிரயம் | | (8 480) |
| மொத்தலாபம் | | 5 782 |
| ஏனை செயற்பாட்டு வருமானம் | (2) | 69.6 |
| விநியோகச் செலவுகள் | (3) | (1 724) |
| நிர்வாகச் செலவுகள் | (4) | (2 056) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | (5) | (60) |
| செயற்பாட்டு இலாபம் | | 2 011.6 |
| நிதிச் செலவுகள் | (6) | (246) |
| வரிக்கு முன் இலாபம் | | 1 765.6 |
| வருமான வரி | (7) | (356) |
| வரிக்குப் பின் இலாபம் | | 1 409.6 |
| அசாதாரண விடயம் | (8) | (20) |
| இந்தாண்டிற்கான இலாபம் | | 1 389.6 |

வரையறுக்கப்பட்ட சம்பத் கம்பனியின்
31.03.2006 இல்
ஐந்தொகை

| | குறிப்பு | தொகை (ரூபா) `000 | தொகை (ரூபா) `000 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | |
| ஆதனம் பொறி இயந்திர உபகரணம் | (10) | 10 560 | |
| முதலீடு | (11) | 400 | |
| அருவச் சொத்து | (12) | 540 | 11 500 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | |
| இறுதியிருப்பு | | 660 | |
| கடன்பட்டோர் | (13) | 165.6 | |
| வருமதி நிலையான வைப்பு வட்டி | | 20 | |
| நட்டஈட்டுக் கம்பனி | | 320 | |
| காசு | (14) | (29.6) | 1 136 |
| | | | 12 636 |
| **உரிமையும் பொறுப்புக்களும் :** | | | |
| பங்கு மூலதனம் | (15) | 6 778.4 | |
| ஒதுக்கங்கள் | (16) | 3 267.76 | 10 046.16 |
| **நடைமுறையல்லாக் கடன்கள் :** | | | |
| வட்டிசெலுத்தவேண்டிய கடன்கள் | (17) | | 1 600 |
| **நடைமுறைக் கடன்கள் :** | | | |
| கடன்கொடுத்தோர் | | 272 | |
| சென்மதிச் செலவுகள் | (18) | 717.84 | 929.84 |
| | | | 12 636 |

........................ ........................

தலைவரின் கைபொப்பம் இயக்குனர் கைபொப்பம்

வரையறுக்கப்பட்ட சம்பத் கம்பனியின்
31.03.2005 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
உரிமையசைவுக் கூற்று

| | சாதாரண பங்கு (ரூபா) `000 | முன்னுரிமைப் பங்கு (ரூபா) `000 | பங்குவட்டம் (ரூபா) `000 | மறுமதிப்பீட்டு ஒதுக்கம் (ரூபா) `000 | பொது ஒதுக்கம் (ரூபா) `000 | இலாப நட்டக் க/கு (ரூபா) `000 | மொத்தம் (ரூபா) `000 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 4 778.4 | 2 000 | 1 600 | 400 | 336 | 680 | 9 794.4 |
| இந்தாண்டு இலாபம் | | | | | | 1 389.6 | 1 389.6 |
| பொது ஒதுக்கம் | | | | | 80 | (80) | 0 |
| பங்கிலாபம் | | | | | | (597.84) | (597.84) |
| | 4 778.4 | 2 000 | 1 600 | 400 | 416 | 1 391.76 | 10 586.16 |

**குறிப்புக்கள் : '000**

(1) **விற்பனைப் புரள்வு :**

| | தொகை (ரூபா) |
|---|---|
| விற்பனை | 14 346 |
| உட்திரும்பல் | (84) |
| | 14 262 |

(2) **ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் :**

| | தொகை (ரூபா) |
|---|---|
| ஐயக்கடன் | 29.6 |
| நிலையான வைப்பு வட்டி | 40 |
| | 69.6 |

(3) **விநியோகச் செலவுகள் :**

| | தொகை (ரூபா) |
|---|---|
| மோட்டார் தேய்வு | 480 |
| அறவிடமுடியாக் கடன் | 56 |
| விளம்பரம் | 720 |
| விற்பனை விநியோகச் செலவு | 468 |
| | 1 724 |

(4) **நிர்வாகச் செலவுகள் :**

| | தொகை (ரூபா) |
|---|---|
| கட்டடத் தேய்வு | 240 |
| அலுவலக உபகரணத் தேய்வு | 240 |
| தளபாடத் தேய்வு | 240 |
| நிர்வாகச் சம்பளம் | 560 |
| மின்சாரம் | 144 |
| தொலைபேசி, தபால் | 192 |
| பணிப்பாளர் படிகள் | 440 |
| | 2 056 |

(5) **ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் :**

| | தொகை (ரூபா) |
|---|---|
| ஆரம்பச் செலவு | 60 |

(6) **நிதிச் செலவுகள் :**

| | தொகை (ரூபா) |
|---|---|
| வங்கிக் கட்டணம் | 54 |
| தொகுதிக்கடன் வட்டி | 192 |
| | 246 |

(கணக்கீடு - II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 24.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## விடைக் குறிப்புகள்

# வணிகக்கல்வி II

வெளியீடு 01

திரு. B.S. பசில் (B.B.A.) யாழ்.

(பகுதி II இன தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றன.)


2. (i) அ.
1. ஆடை ஏற்றுமதிக்கான கோட்டாமுறை ( பல்நார் உடன்படிக்கை) முடிவடைந்தமை.
2. ஆடை ஏற்றுமதிச் சந்தையில் சீனா, இந்தியா போன்ற புதிய நாடுகள் பிரவேசித்தமை.

ஆ.
1. பல ஆடை உற்பத்திச் தொழிற்சாலைகள் மூடப்படுதல்.
2. பலருக்கு வேலையில்லா நிலை ஏற்படல்.
3. இலங்கையின் ஏற்றுமதி வருமானம் பாதிக்கப்படல்.
4. ஆடை ஏற்றுமதிக்கு உதவும் துணைச் சேவைகளின் விற்பனை பாதிப்படைதல்.

(ii)

| | முயற்சியாளர் | முகாமையாளர் |
|---|---|---|
| 01 | இவர் இடரை எதிர்ப்படுவர் | அவ்வாறில்லை. |
| 02 | இவர் உடமையாளர் | இவர் ஊழியர் |
| 03 | இவர் இலாபம் பெறுவார் | இவர் சம்பளம் பெறுவார் |
| 04 | இவர் நிறுவன் இலக்கினைத் தீர்மானிப்பர். | இவர் நிறுவன இலக்கை நடைமுறைப்படுத்துவார் |

(iii).




(iv).
1. மூலதனத்தைப் பெறுவதிலுள்ள சவால்கள்.
2. இறக்குமதிகளால் ஏற்படும் போட்டி.
3. தொழில்நுட்பப் பற்றாக்குறை.
4. சமூகக் கலாச்சாரக் காரணிகளால் ஏற்படும் பிரச்சினைகள்.

(v). அ.
1. வேலை மூலமான பயிற்சி.
2. வேலைக்கு வெளியிலான பயிற்சி.
3. அறிமுகப் பயிற்சி.


ஆ.
1. ஊழியர்கள் பயிற்சி பெற்றவர்களாக மாறலாம் இதனால் வேலையில் திருப்தி ஏற்படலாம்.
2. ஊழியர்களின் திறன் அதிகரித்து வெளியீடு அதிகரிக்கும்.
3. பயிற்சியால் ஊழியர்கள் எதிர்காலத்தில் தம்மை விருத்தி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.
4. பயிற்சி பெற்ற ஊழியர்கள் காணப்படுவதால் ஆளணியின் பலம் அதிகரிக்கும்
5. வளங்களைச் சிறப்பாக பயன்படுத்தலாம்
6. வெளியீடுகளின் தரம் அதிகரிக்கும்
7. மேற்பார்வை செய்தலைக் குறைக்கலாம்
8. நட்டங்கள் அல்லது விரயங்களைக் குறைக்கலாம்
9. வேலைக்கு ஒழுங்கீனமாக சமுகமளித்தல், விலகுதலைத் தவிர்க்கலாம்

(iv) (அ) உயர் மூலதன இணைப்பு
நிலையான வருமானம் பெறும் கடன் மூலதனம் அதிகமாகவும் உரிமை மூலதனமும் குறைவாகவும் இருந்தால் அது உயர் மூலதன இணைப்பு ஆகும்.

(ஆ) பங்களிப்பு
அலகின் விற்பனை விலையிலிருந்து அலகிற்கான மாறும் கிரயம் நீக்கிப் பெறப்படும் தொகை பங்களிப்பு ஆகும்.

(இ) மானிடத்திறன்
இது முகாமையாளருக்கு இருக்க வேண்டிய ஒரு திறன்.
மற்றவர்களுடன் இணைந்து வேலை செய்யும் ஆற்றல், தனது உதவியாளர் களுக்கு சிறந்த வழிகாட்டுவதும்
ஊக்குவித்து வேலை செய்விப்பதுமான ஆற்றல் மானிடத்திறன் ஆகும்.

3. (i).




(ii). அ. ஒரு நிறுவனம் அதன் குறிக்கோளை அடையும் பொருட்டு பல செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். நிறுவனத்தின் ஊழியர்களை செயற்படுத்தல், உற்பத்தி பொருள், செய்முறை, வாடிக்கையாளர், பிரதேசம் எனத் தொகுதிகளாக்குதல் பகுதி யாக்கல் ஆகும்.

ஆ.
1. தொழிற்பாட்டின் அடிப்படையில் பகுதியாக்கல்.
2. உற்பத்திப் பொருள் அடிப்படையில் பகுதியாக்கல்.
3. உற்பத்திச் செய்முறை அடிப்படையில் பகுதியாக்கல்.
4. வாடிக்கையாளர் அடிப்படையில் பகுதியாக்கல்.
5. புவியியல் பிரதேசத்தின் அடிப்படையில் பகுதியாக்கல்.

(iii). அ. தனிப்பட்டவரின் அல்லது குழுவின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் வலு ஆகும்.

ஆ.
1. நிறுவனம் அதன் நோக்கம் அல்லது குறிக்கோளை அடைய உதவும்.
2. ஊழியர்களை வழிநடத்த உதவும்.
3. வளங்களை சிறப்பாகப் பயன்படுத்த உதவும்.
4. போட்டியை எதிர் கொள்ள உதவும்

(iv). அ. **விசால அளவு** - ஒரு முகாமையாளர் அல்லது மேற்பார்வையாளர் வெற்றிகரமாக மேற்பார்வை செய்யக் கூடிய ஊழியர்களின் அளவு விசால அளவு ஆகும்.

ஆ. **படிமுறைச்சங்கிலி** – அதிகாரமானது உயர்முகாமையில் இருந்து கீழ் முகாமை வரை முறிவுகளின்றி சீராக படிப்படியாகக் குறைந்து செல்ல வேண்டும் என்பது படிமுறைச் சங்கிலி ஆகும்.

இ. **கட்டுப்படுத்தல** - நிறுவனப் பெறுபேறுகள் நியமத்துக்கு அமைவாக உள்ளன வா என்பதனை பரிசீலித்து உறுதிப்படுத்துவதும் அவ்வாறான வேளையில் குறைபாடுகள் (தவறுகள் அல்லது விலகல்) காணப்பட்டால் அவற்றை சீராக்கு வது கட்டுப்படுத்தல் ஆகும்.

(வணிகக்கல்வி II இல் பகுதி - II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 24.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org